3

1.1.57

# கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை



31

183
1-57

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 - JAN 1957
MADRAS

- 2 -

# செய்திகள்

## கல்விச் சீர்திருத்தம்

அடுத்த பத்தாண்டுகளுக்குள் முதல் ஐந்து வகுப்புக்கள்வரை கட்டாய இலவசக் கல்வியை அமலுக்குக் கொண்டுவர வேண்டும் என்றும் அந்த வகுப்புகளுக்கு அரை நாள் கல்வி போதும் என்றும் கல்விச் சீர்திருத்தம் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறது.

## இரண்டு சிறுவர்களின் சாகஸம்

நியூ யார்க் நகரத்தைச் சேர்ந்த இரண்டு சிறுவர்கள் ஒரு விமானத்தில் பிரயாணம் செய்தனர். அவர்களில் ஒருவனுக்கு 13 வயது. மற்றொருவனுக்கு 11 வயது. அவர்கள் இருவரும் விமானத்தை ஓட்டி, ஒரு விபத்தும் இல்லாமல் சொந்த ஊரான மாஸ்டிக்குக்குத் திரும்பிவிட்டார்களாம்.

## உலகிலேயே நீளமான குகை ரெயில்பாதை

இப்போது உலகிலேயே மிக நீளமான குகை ரெயில்பாதை சுவிட்சர்லாந்து தேசத்தையும் இதாலியையும் இணைக்கும் பாதைதான். இது 12 மைல் நீளமுள்ள பாதை. ஆனால் இப்போது 16 மைல் நீளமுள்ள குகை ரெயில்பாதை ஒன்றைத் தென்னமெரிக்காவில் சிலி நாட்டில் கட்டப்போகிறார்கள்.

## ஹிந்து ஹைஸ்கூல் தமிழ் மாணவர் மன்றம்

திருவல்லிக்கேணியிலுள்ள ஹிந்து ஹைஸ்கூல் மிகப் பழமையான புகழ்பெற்ற பள்ளிக்கூடம். இது தொடங்கி 106 வருஷங்கள் ஆகின்றன. இந்தப் பள்ளியின் தமிழ் மாணவர் மன்றம் மிகச் சிறப்பாகச் செயலாற்றி வருகிறது. சென்ற பக்ஷம் கண்ணன் ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பல மாணவர்கள் கலந்துகொண்டார்கள்.

## சென்னை - அரக்கோணம் மின்சார ரெயில்பாதை

அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் சென்னைக்கும் அரக்கோணத்துக்கும் இடையே மின்சார ரெயில்பாதை அமைக்கப் போகிறார்களாம். இப்பொழுது தாம்பரம் வரையில் ஓடும் மின்சார ரெயில் பாதையை விரைவில் விழுப்புரம் வரையில் விஸ்தரிக்கப் போகிறார்கள்.

## விபத்தைத் தடுக்கும் எம். டி. பி.

சிதம்பரத்தைச் சேர்ந்த மூவேந்தர் என்பவர் ரெயில் விபத்தைத் தடுக்கக் கூடிய புதிய சாதனம் ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறாராம். இதற்கு எம். டி. பி. என்று பெயராம். தண்டவாளம் பெயர்ந்து போதல், பாலத்தில் உடைப்பு, ஆணி கழன்று போதல், பாதையில் வெடி வைத்திருப்பது முதலிய விபத்துகள் ஏற்படாவண்ணம் இது தடுத்து எச்சரிக்கை செய்துவிடுகிறதாம். இது காஸினால் இயங்குகிறது என்றும், ரெயிலுக்கு ஒரு பர்லாங்கு முன்பு இது சென்றுகொண்டிருக்கும் என்றும் சொல்கிறார்கள். பாதையில் ஏதாவது விபத்து என்றால் இது 'ஓ' வென்று சத்தம் போட்டுத் தானாகவே நின்றுவிடுமாம். உடனே பின்னால் வரும் வண்டியின் எஞ்சின் டிரைவருக்கு எச்சரிக்கை செய்வது போல் ஒரு சிவப்பு விளக்கு எரியத் தொடங்குமாம். மேலும் பாலத்தின் மீது அது ஓடும்போது அது எத்தனை எடை தாங்குமென்றும் காண்பிக்குமாம்.

## முதல் சுதந்தரப் புரட்சி

சிப்பாய்க் கலகம் என்று வெள்ளைக்காரர் வர்ணித்த முதல் சுதந்தரப் போர் 1857-ஆம் ஆண்டில் நடைபெற்று நூறாண்டுகள் ஆகிவிட்டன. அதன் நூற்றாண்டு விழா நினைவாக விசேஷத் தபால் தலைகளை வெளியிட அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. டில்லி பாதுஷாவாக இருந்த பகதூர்ஷா, ஜான்ஸிராணி லக்ஷ்மிபாய், மராட்டிய வீரன் நானா பர்னவிஸ் முதலியவர்கள் அந்தப் புரட்சியில் கலந்து கொண்டவர்கள்.

கண்ணன்



## பொருளடக்கம்

மலர்: 8 இதழ்: 1

1 - 1 - '57


| | |
|---|---|
| குழந்தைகளே! | பக்கம் 2 |
| ஐந்து ரூபாய் | .. 3 |
| கடைக்குட்டியின் பிரார்த்தனை | .. 5 |
| சைனு சு - சூ! | .. 6 |
| கவியரங்கம் | .. 12 |
| நட்பின் வினை | .. 13 |
| நினைத்ததும் நடந்ததும் | .. 19 |
| எண்ணிலே படங்கள்! | .. 22 |
| வழ வழா, கொழ கொழா! | .. 23 |
| பல் உடையப் போய்... | .. 27 |
| ஸ்டிரைக் | .. 29 |
| நீதி மன்றம் | .. 34 |
| புலிக்குட்டி | .. 37 |
| நீங்களும் நானும் | .. 40 |


அட்டைப் படம்:
போட்டோ N. ராமகிருஷ்ண

செய்திகள் - 2-அட்டை

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/4

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

## நிஜக் கதை!

'உஸ்...அப்பாடா..' என்று சொல்லிக்கொண்டே ஆசுவாசத்துடன் வீட்டிற்குள் நுழைந்தார் அப்பா. அவரைத் தொடர்ந்து பாபு, அவன் தங்கை, அம்மா எல்லோரும் வீட்டிற்குள் நுழைந்தனர். அவர்கள் பக்கத்துத் தெருவில் நடந்த காலட்சேபத்தைக் கேட்டுவிட்டு வருவதற்குள் இரவு மணி பத்து ஆகிவிட்டது. எல்லோரும் சாப்பிட்டுவிட்டுப் படுத்துக் கொண்டனர்.

பாபு ரேழி அலமாரியிலிருந்து, தனக்குப் பிடித்த பாலர் பத்திரிகையை எடுக்க, அலமாரியின் மீது ஏறினான். விளக்கு மங்கலாக இருந்தது. பத்திரிகைக்குப் பதிலாக, விளக்கெண்ணெய்ப் புட்டி மீது கை படவே, புட்டி சாய்ந்துவிட்டது. அதில் மேல் மூடி இல்லாததால், எண்ணெய் கீழே கொட்டிவிட்டது. ரேழியெல்லாம் எண்ணெய். இதைப் பார்த்துவிட்டார் அப்பா. பாபுவின் முதுகு வீங்கியது. காலையில் எண்ணெயைத் துடைத்து விடலாம் என்று எல்லோரும் படுக்கச் சென்றுவிட்டனர்.

இரவு இரண்டு மணி இருக்கும். ரேழியில் தடார் என்ற சப்தம். அப்பா 'சடக்'கென்று எழுந்துவிட்டார். பாபுவும் எழுந்துவிட்டான். பாபு 'ஸ்விட்சை'த் தட்டினான். அங்கே ரேழியில், ஒரு திருடன் கீழே விழுந்து எழுந்து ஓடப் பார்த்தான். அப்பா ஓடிச் சென்று அவனைப் பிடித்துக் கொண்டார்.

அப்பாவிற்குப் பாபுவின் மேல் வெகு சந்தோஷம். அவன் எண்ணெயைக் கொட்டியதால்தானே திருடன் பிடிப்பட்டான்? பாபுவிற்கு ஒரு புது சைக்கிள் பரிசாகக் கிடைத்தது. அடித்த கைதானே அள்ளியும் கொடுக்கும்?

—வெ. அனந்தன்.

# குழந்தைகளே!

உங்கள் எல்லாருக்கும் என்னுடைய புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த இதழில் தொடர்கதைப் போட்டியின் முடிவை வெளியிட முடியவில்லை. இந்தத் தடவை தொடர்கதைப் போட்டி மிகக் கடுமையான போட்டியாகவே அமைந்துவிட்டது. முன்னணியிலுள்ள பலர் இதிலே கலந்துகொண்டிருக்கிறார்கள். பலர் பரிசுக்கு முந்துகிற வேகத்தோடு அருமையாக எழுதியிருக்கிறார்கள். ஒவ்வொரு கதையும் ஒவ்வோர் அம்சத்தில் சிறந்து விளங்குகிறது. பஞ்சாயத்தார்கள் திக்குமுக்கலாடும்படி எல்லா அம்சங்களும் சிறப்பாக அமைந்துள்ள கதைகளுக்கும் குறைவில்லை. இதை முன்னதாகக் கூறுவதில் தவறில்லை என்பதால் சொல்கிறேன். பரிசிலனையெல்லாம் முற்றும் முடிவாகிவிட்டது. பஞ்சாயத்தார்கள் கூடி முடிவை நிர்ணயிக்குமுன் பத்திரிகை வெளிவர வேண்டியதாகிவிட்டதால் இந்த இதழில் முடிவு தெரிவிக்க முடியாமல் போனதற்கு வருந்துகிறேன். அடுத்த இதழில் போட்டியின் முடிவு வெளியாகும். பரிசு பெற்ற கதையையும் சாத்தியமானல் தொடங்கிவிடுகிறோம்.

'நீங்களும் நானும்' என்ற பகுதி இந்த இதழில் தொடங்கியிருப்பதை நீங்கள் வரவேற்பீர்கள் என்று நம்புகிறேன். முதல் முதல் ஆரம்பமானதால் ஒரு பக்கமே இது வெளி வந்திருக்கிறது. இனி அதிகப் பக்கங்கள் இதற்கென ஒதுக்கப்படும்.

'கண்ணன் தபால் பெட்டி'யில் உங்கள் அபிப்பிராயங்கள், துணுக்குகள், கணக்குகள், கடிதங்கள் எல்லாவற்றையும் நீங்கள் எழுதலாம்.

அடுத்த இதழ் பொங்கல் இதழ் என்பது உங்களுக்கு நினைவு இருக்கும். கண்ணன் அதிகப் பக்கங்கள் கொண்டதாக விளங்கும். அதிகப் பக்கங்கள் என்றால் அதிகக் கதைகள் இருந்துதானே தீரும்? அடுத்த இதழில்தான் புலிக் குட்டி நிறைவுறுகிறது. அது முடிந்த பிறகு புதிய சித்திரத் தொடர் ஒன்று விரைவில் ஆரம்பமாகும். பொதுவாகப் புது வருஷத்தில் கண்ணனில் பல மாறுதல்களையும் அபிவிருத்திகளையும் நீங்கள் காணலாம்.

கண்ணனில் பல புதிய எழுத்தாளர்களுக்கு அவ்வப்போது நாங்கள் இடமளித்து ஊக்கப்படுத்தி வருகிறோம். இது உங்களுக்கே தெரியும். பல புதிய எழுத்தாளர்கள் தங்கள் திறமையால் கண்ணன் மூலம் பிரபலமடைந்திருக்கிறார்கள். திறமையை யாரும் அடக்கி வைக்க முடியாது. திறமையுள்ள யாருக்கும் கண்ணன் இடமளிக்கத் தயங்கியதே இல்லை. ஆனால் சிற்சில சமயங்களில் இதை ஒரு சிலர் தவறாகப் பயன்படுத்திக் கொண்டு விடுகிறார்கள். பழைய சிறுவர் பத்திரிகைகளிலிருந்து வேறு யாரோ எழுதிய கதையைப் பெயர்த்து, தன் பெயரைப் போட்டுக் கண்ணனுக்கு அனுப்பிவிடுகிறார்கள். இது மிகப் பெரிய தவறு என்று அவர்களுக்கே தெரியும். நாங்களும் எச்சரித்திருக்கிறோம். இதனால் நன்றாக எழுதக்கூடிய புதிய எழுத்தாளர்களைக்கூடச் சந்தேகப்படும்படி அவர்கள் செய்துவிடுகிறார்கள். ஆகவே அப்படிப் பிறர் கதையை மாற்றித் திருத்தி அனுப்ப வேண்டாம் என்று அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அப்படி யாரேனும் இனியும் எழுதியனுப்பினால் அவர்கள் பெயர், முழு விலாசம் எல்லாவற்றையும் வெளிப்படுத்திவிட நேரும். இதற்கு இடம் கொடாமல் சொந்தமாகக் கற்பனை செய்து எழுதும்படியும் கேட்டுக் கொள்கிறேன்.

பொங்கல் இதழோடு சந்திப்போம்.

ஆசிரியர்

211805

# ஐந்து ரூபாய்

பாலா

“ஏலே! அங்கே என்னடா பண்ணறே? போய்ப் படி!”

அம்மா காய்கறி விற்பவனுடன் பேரம் செய்வதை வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்த ரமணி அப்பாவின் குரல் கேட்டதும் திடுக்கிட்டான்.

“அப்பாவாம் அப்பா! எப்பொழுது பார்த்தாலும் ‘படி படி’ என்று பிராணனை வாங்கிண்டு!” என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டே உள்ளே போனான்.

கூடத்தில் உட்கார்ந்து ராட்டையில் நூல் நூற்றுக்கொண்டிருந்த அவனுடைய அப்பா ஒரு முறை தலையைத் தூக்கிப் பார்த்துவிட்டு மீண்டும் தம் வேலையில் ஈடுபட்டார்.

ஏதோ, அப்பா சொன்னாரே என் பதற்காகப் புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்தானே தவிர ரமணிக்குப் பாடத்தில் மனமே செல்லவில்லை. அவனுடைய எண்ணமெல்லாம் எங்கோ சுழன்றது.

இரண்டு நாட்களுக்குமுன் . . . . .

தோளில் புத்தகப் பையும் கையில் டிபன் பாக்ஸுமாகப் பள்ளிக் கூடத்திற்குப் போய்க்கொண்டிருந்தான் அவன். அந்தச் சமயத்தில் தலைக்கு மேல் விமானம் பறக்கும் சத்தம் கேட்டது. ரமணி வியப்போடு தலை நிமிர்ந்து நோக்கினான்.

அவனுடைய தலைக்குமேல், வெகு சமீபமாகப் பறந்து கொண்டிருந்தது ஒரு ‘ஏரோப்ளேன்’. அதில் பொறிக்கப்பட்டிருந்த எழுத்துக்கள் கூட நன்றாகத் தெரிந்தன. ரமணி அதையே கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்த போது, அதிலிருந்து வீசி எறியப்பட்ட ஒரு கற்றைக் காகிதம், தனித்தனியே பிரிந்து காற்றில் பறந்து பூமியை நோக்கி வந்தது. அதில் ஒரே ஒரு காகிதம் மட்டும் அவனைத் தேடி வந்தது. அதில்:—

நண்பர்களே!

பிறந்தது முதல் நிலத்திலேயே சுற்றிச்சுற்றி அலுத்து விட்டதா? அப்படியானால் இதோ ஒரு அருமையான சந்தர்ப்பம்! ரூபாய் ஐந்து கொடுத்தால் போதும். ஐந்து மணி நேரம் வானத்திலே வட்டமிட்டுப் பறக்கலாம்! ஆகாய விமானத்தில் இருந்த வண்ணமே உங்கள் நகரைச் சுற்றி வரலாம்! இந்த அரிய வாய்ப்பை நழுவவிடாதீர்கள்!

இதைப் படித்ததும் ரமணியின் உள்ளத்திலே ஆசை மெல்லத் தலை தூக்கியது. இரண்டு நாட்களாக






அவனுக்குப் படிப்பில் மனமே ஓடவில்லை. ஆகாய விமானத்தைச் சுற்றியே சுழன்றது.

''எலே! படிக்காமல் எங்கேடா வேடிக்கைப் பார்க்கிறாய்?'' - அவனுடைய அப்பா அவனை உலுக்கி விட்டு வெளியே போனார்.

'ஐந்து ரூபாய்கள்தானே! அப்பாவைக் கேட்டால் கொடுப்பாரா?..' ரமணிக்கு நம்பிக்கையில்லை. அரிசி வாங்கவும் பணமில்லாமல் தவித்துக்கொண்டிருந்தார் அவர். இந்தச் சமயத்தில் உதைத்து அனுப்புவாரே தவிர, பணம் கொடுக்க மாட்டார். பின் என்ன செய்வது?

ரமணியின் கண்கள் அப்பாவின் ஒட்டுப் போடப்பட்டிருந்த கறுப்புக் கோட்டில் பதிந்தது.

ரமணி நடுங்கும் உள்ளத்தோடு கோட்டுப் பாக்கெட்டில் கையை விட்டான். பணம் இல்லை. ஏதோ கடிதம் கையில் தட்டுப் பட்டது. வெளியே எடுத்தான். அது ஒரு ரசீது. ஐந்து ரூபாய்கள் பெற்றுக் கொண்டேன் என்று அவனுடைய அப்பாவின் கையெழுத்துடன் இருந்தது. 'ஐந்து ரூபாய்கள் பெற்றுக்கொண்டாராமே! அப்படியானால் அந்தப் பணம் எங்கே?'

ரமணி அவசர அவசரமாகக் கோட்டின் மற்ற பாக்கெட்டுகளைக் குடைந்தான். 'இதோ! இந்த உள் பாக்கெட்டில் தட்டுப்படுவது என்ன?' ஐந்து ரூபாய் நோட்டு! ஆமாம். ரமணி வெகு ஆவலோடு எதிர்பார்த்த ஐந்து ரூபாய்கள்!

ரமணி அந்த ரூபாய் நோட்டை எடுத்துத் திருப்பித் திருப்பிப் பார்த்தான். உடனே அவன் ஆகாய விமானத்தில் பறக்கத் தொடங்கி விட்டான். மானஸீகமாய்த்தான்!

ரூபாய் நோட்டுடன் இரண்டே எட்டில் வாசலுக்கு வந்தான். அதற்குமேல் அவனைப் போகவிடாமல் நிறுத்தியது அப்பாவின் குரல்.

''இந்தா கமலம்! வீணாகப் பிடிவாதம் பிடிக்காதே! கையிலே காசு இல்லாத காலத்திலே ஊருக்குப் போக முடியுமா? நாளைக்கு விடிஞ்சால் ரமணிக்குப் பள்ளிக்கூடத்துச் சம்பளம் கட்டணுமேன்னு நாயாச் சுத்தி அஞ்சு ரூபாய் சம்பாதிக்கறத்துக்குள்ளே போறும்னு ஆயிடுத்து!''

''அப்படீன்னா ஐந்து ரூபாய் கிடைச்சுடுத்தா?'' — அம்மாவின் குரல்.

''ஆமா! எப்படி அந்தப் பணம் கிடைச்சுது தெரியுமா? பெரிய ஆஸ்பத்திரி வழியா போயிண்டு இருந்தேன். அங்கே ஒரு போர்டு போடப்பட்டிருந்தது. நம்ம உடம்பிலே இருக்கிற ரத்தம் கொஞ்சம் கொடுத்தா பணம் கொடுக்கப் படும்ன்னு. தயங்கல்லே. நான் உடனே போய் ஒண்ணரை அவுன்ஸ் ரத்தம் கொடுத்தேன். வள்ளிசா அஞ்சு ரூபாய் கொடுத்துட்டாங்க. நம்ம ரமணி படிச்சு முன்னுக்கு வர வேண்டாமா?''

வாசலில் கேட்டுக்கொண்டிருந்த ரமணியின் கண்களிலிருந்து பலபல வென்று கண்ணீர் உதிர்ந்தது. 'நமக்காக உடலில் ஓடும் ரத்தத்தை விற்றுவிட்டு வந்திருக்கும் தந்தையை ஏமாற்ற எண்ணினேனே!' மறுகணம் எடுத்த இடத்திலேயே பணத்தை வைத்தான். பிறகு தன் இடத்தில் போய் அமர்ந்து படிக்கத் தொடங்கினான்.



# கடைக்குட்டியின் பிரார்த்தனை

எ. ந. கணபதி

1. ஆட்டுக்கிடாக் கொம்புபோல மீசையெனக்கு
ஆண்டவனே நீகொடுத்தால் அப்புறமிந்த
வீட்டுக்குள்ளே அப்பாஅம்மா அக்காஇவர்கள்
விரட்டிமிரட்டி அடித்துப்பய முறுத்தமுடியுமோ?

2. அப்பா என்னை ஆத்திரத்தால் முதுகிலடிக்கிறார்!
அம்மா என்னைக் கோபமுற்றுத் தலையிலடிக்கிருள்!
தப்பாமல் தன்பங்கிற்கு என் சொந்தஅக்காளும்
தாடையிலே ரெண்டுபோட்டுப் 'போடா' என்கிருள்!

3. சித்தெநேரம் கழித்துஅண்ணு சீறிவருகிருன்;
சிண்டைப்பிடித்து ரெண்டுஉதை எட்டிவிடுகிருன்!
அத்தனையும் நான்பொறுத்தேன் இத்தனைநாளும்—இனி
அரைக்கணமும் தாங்கமாட்டேன் இந்தக்
கொடுமையை!

4. ஆட்டுக்கிடாக் கொம்புபோல மீசையிருந்தால்—இப்படி
அலட்சியமாய் எண்ணிஎன்னை அடிக்கமுடியுமோ?
'தாட்டுப்பூட்டு' என்றுஅண்ணு சீறமுடியுமோ?
தம்பிஎன்று பாராமலே உதைக்கமுடியுமோ?



# சைனா சுசூ



ஆர்வி

கண் இமைக்கும் நேரம்தான்; சீனன் உள்பக்கம் திரும்பி ஷங்கங்கைப் பார்த்தான். "இதோ வந்துவிட்டேன்!" என்று சொல்லி விட்டு, மீண்டும் வெளியே பார்த்தால், மரத்தடியில் நின்ற நெடிய கரிய உருவத்தைக் காணவில்லை. அதற்குள் அது எங்கேயோ மறைந்து விட்டது. கைக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பம் நொடியில் நழுவி விட்டது.

"போடா! உன்னாலே எல்லாம் கெட்டுப் போச்சு!" என்று சொல்லிக் கொண்டே சீனன் அவனருகில் வந்தான்.

ஷங்கங் இரைக்க இரைக்க ஓடி வந்திருந்தான். ஏதோ தலை போகிற காரியமாகத்தான் இருக்க வேண்டும் என்று சீனனுக்குத் தோன்றியது.

"சீனா! உடனே புறப்படு! ஆபத்து!" என்றான் ஷங்கங்.

"எங்கே, யாருக்கு, எப்போது?..." என்று தடுமாற்றமாகக் கேட்டான் சீனன்.

"முதல்லே புறப்படேன்; பிறகு பேசிக்கொள்ளலாம்! எல்லாம் போகும்போது பேசிக்கலாம்!"

அதற்குப் பிறகு சீனன் கொஞ்சம் கூடத் தாமதிக்கவில்லை. மளமளவென்று ஓடிப்போய், பீரோவைப் பூட்டினான். விளக்கை அணைத்தான். வெளியில் வந்து இருவருமாகக் கதவைப் பூட்டினார்கள். அப்போது சீனன் எதிர் அறையைப் பார்த்தான். அது உள் பக்கமாகத் தாளிடப்பட்டிருந்தது. வெளியில் படுத்திருந்த சாபரைக் காணவில்லை.

"சாபரைக் காணோமே!" என்றான் சீனன்.

"நான்தான் போய் வண்டியை எடுக்கச் சொன்னேன். வாசலில் காத்திருப்பான்!" என்றான் ஷங்கங்.

இருவரும் ஓட்டமும் நடையுமாகவே ஓடி, வெளியில் வந்தனர். ஹோட்டல் அநேகமாக நித்திரையில் ஆழ்ந்து விட்டது. வேலைக்காரர்கள் சோர்ந்து ஓய்ந்து, மூலைக்கு மூலை உட்கார்ந்து தூங்குகிற நிலையில் இருந்தார்கள். ஹோட்டல் மானேஜரைக் காணவில்லை. அவருடைய துணையாள் மட்டும் மேஜை அடியில் கணக்குகளை முடித்துக்கொண்டிருந்தான். ஓடிவரும் சீனனைக் கண்டதும் அவன் எழுந்திருக்க முயன்றான். ஆனால் அதற்குள் சீனன் வாசலுக்கு வந்து விட்டான். சாபர் மோட்டார் வண்டியோடு போர்ட்டிகோவில் காத்திருந்தான். இவர்கள் இருவரும் ஏறிக்கொண்டதும், வண்டி புறப்பட்டு விட்டது.

"எங்கே போகிறோம்?" என்றான் சீனன்.

"நம்ப பாரிஸ்டர் வீட்டுக்கு!" என்றான் ஷங்கங்.

"என்ன நடந்தது? அங்கே என்ன இப்போது?"

"அங்கே என்ன நடக்கப் போகிறதோ, தெரியாது. ஆனால் நாம் அங்கேதான் முதலில் போக வேண்டும்."

"அதுதான் என்ன என்கிறேன்!"

"நாளைக் காலையில் சிங்கப்பூர் கப்பல் புறப்படுகிறதாம்! அதற்குள் ஏதோ விபரீதம் நடக்கப் போகிறது!"

"உனக்கு எப்படித் தெரியும்?"

"முழுவதும் தெரியாது. ஆனால் கொஞ்சம் தெரியும். போகும் போது உன்னிடம் கைச் செலவுக்கு எதுவும் வாங்கிக்கொள்ளாமல் போனேனா? இரவு சாப்பாட்டுக்குக் காசு இல்லை. உன்னை ரகசியமாகப் பார்த்து, ஏதாவது பணம் வாங்கிக்கொண்டு போகலாம் என்று வெளியிலிருந்த மரத்தடியில் காத்திருந்தேன். யாருடைய கண்ணிலும் பட வேண்டாம் என்றுதான் அங்கே நின்றேன்...."

"எந்த மரத்தடியில், எப்போது?"

"அதுதான் இடது பக்கமாக இருக்கிறதே, அந்த மரத்தடியில்!"

"என் அறைப் பக்கத்திலிருந்து பார்த்தால் தெரிகிறதே, அதனடியிலா?"

"ஆமாம்:"

"எப்போது—"

"நான் ஏழு மணியிலிருந்து நிற்கிறேன் - அப்புறம் எட்டு எட்டரை மணி இருக்கும். அந்தச் சீனக்காரன் வந்து மரத்தடியில் நின்றான்.."

"ம்..? உன்னைப் பார்த்தானா?"

"இல்லை. அவன் பார்க்கும் வரையில் நான் எதிரே நின்றால் தானே? அவனைக் கண்டதுமே நான் போய் ஒளிந்துகொண்டு விட்டேன்?

"உம், அப்புறம் சொல்லு!"

"சிறிது நேரம் அவன் அங்கே நின்றான். பிறகு அப்படியும் இப்படியும் உலாவினான். அதற்கப்புறம் வாசல் வரையில் போய் விட்டு, போய்விட்டு வந்தான். அப்படி இரண்டு மூன்று தடவை போய் விட்டு வந்து, என்ன நினைத்துக் கொண்டானோ என்னமோ, உள்ளே போய் விட்டான். நான் அப்பவே அவனுக்குத் தெரியாமல் உன் அறைக்குப் போய்விடலாமா என்று பார்த்தேன். அப்போது திடீரென்று உன் அறையில் ஜன்னல் வழியாக வெள்ச்சம் தெரிந்தது. 'சரி; நீ உன் அறையில்தான் இருக்கிறாய்' என்று நிச்சயம் பண்ணிக் கொண்டேன்...."

"அப்போ உடனே வருவது தானே?"

"வரத்தானே நினைச்சேன். ஆனால் வராததே நல்லதாகப் போச்சு என்று வை. நான் வேறு மாதிரியாக யோசனை பண்ணினேன். அதாவது மரத்தின் மேலே ஏறி கிளைவழியாக வந்து, உன் அறைக்கு இறங்கி வந்துவிடலாம் என்று ஒரு நினைப்பு வந்தது. சட்டென்று ஏறிவிட்டேன்..."

"யாரு நீயா? நீயா அப்படி இப்போது சற்று முன்பு ஏறினது?.."

"சற்று முன்பா? இரேன், கேளேன் முழுவதையும்! கீழே இருக்கும் பெரிய கிளை வரையில் ஏறினேன். அதுக்குள்ளே மரத்தடியிலே யிருந்து ஒரு பெரிய சீட்டிச் சத்தம் கேட்டது..."

"உம்...."

"கீழே எட்டிப் பார்த்தேன். அப்பா! எனக்குக் குலை நடுக்கமாகப் போச்சு..."

"ஏன்?"

"ஏன்னா, அங்கே பூதம்போல ஒருத்தன் வந்து, கறுப்புக் கம்பளியாலே உடம்பு, மூஞ்சியெல்லாம் மூடிண்டு, நின்றான்!"

"அதை இப்ப நினைச்சாலும் பயமாக இருக்கு. மரத்தடியிலே இருட்டா? அதிலே அவன் வேறே கறுப்புப் பூதம் மாதிரி நிற்கிறானா? என் கால் கையெல்லாம் வெடவெடத்துப் போச்சு. போயேன்.. முதல்லே அது மனித உருவம்னே எனக்குத் தோணல்லெ. ஏதோ பேயோ, பிசாசோ என்றுதான் நினைச்சுட்டேன். அவன் மறுபடியும் சீட்டிச் சப்தம் கொடுத்தப் புறம்தான் எனக்கு அது மனித உருவம்னு தைரியம் வந்தது.. இருந்தாலும் படபடப்பு அடங்கல்லே! கீழே விழுந்துடாமெ இருந்ததே பெரிசுன்னு வையேன்.."




வாத்தியார்: (பையனைப் பார்த்து) திடீரென்று கடவுள் உன் முன் தோன்றி என்ன வரம் வேண்டும் என்று கேட்டால் என்ன கேட்பாய்?

பையன்-1: பணம் வேண்டுமென்று கேட்பேன், ஸார்.

பையன்-2: (பெருமையுடன்) ஆனால் நான் அறிவு வேண்டுமென்று கேட்பேன்.

பையன்-1: உண்மைதானே ஸார்! யாருக்கு எது இல்லையோ அதைத்தானே ஸார், கேட்பார்கள்? —பி. சந்திரசேகரன்

---

"சரி; அப்புறம்; சட்டுனு சொல்லு" என்று அவசரப்படுத்தினான் சீனன். ஏனெனில் வண்டி பாரிஸ்டர் இருந்த சாலைக்குச் சமீபமாக வந்து விட்டது. இன்னும் ஒரு திருப்பம் தான் பாக்கி.

"அப்புறம், ஹோட்டலுக்குள்ளேயிருந்து அந்தச் சைனுக்காரன் இருக்கிறானே—அதான் நம்ப எதிரி கிங்கிங்—அவன் மறுபடியும் வந்து விட்டான். சீட்டிச் சத்தம் கேட்டுத்தான் வந்தானோ, இல்லே, அவனாகத்தான் வந்தானோ! வந்துவிட்டான். அந்தக் கறுப்புக் கம்பளிக்காரங்கிட்டே வந்து, 'ஏன் இத்தனை நாழி?' ன்னு கேட்டான். நான் கிளையோடு கிளையாக அப்படியே பதுங்கிக்கொண்டு படுத்திருந்தேன். நல்லவேளையாக என்னை அவனுக ரெண்டு பேருமே பார்க்கவில்லை. பதிலுக்கு அந்தக் கறுப்புக் கம்பளி, 'பறங்கிமலைப் பங்களாவுக்குப் போயிட்டு வர நாழியாயிட்டுது' என்றான்..."

"பறங்கிமலைப் பங்களாவா? அதாவது நம்ப பங்களாவுக்கா?"

"ஆமாம். 'போன காரியம் என்ன ஆச்சு?' என்றான் கிங்கிங்.."

"தமிழிலேயா கேட்டான்?"

"ஆமாம்; அசல் தமிழிலே, நம்பளைப்போல் பேசற தமிழிலேதான் கேட்டான். அவனுக்குத் தமிழ் நன்னாத் தெரியும் போலிருக்கு! ஜோராகப் பேசறான். நாம்கூட அப்படிப் பேசமாட்டோம். ஆச்சா? அப்படிக் கேட்டானா? அதுக்குவந்து அந்தக் கறுப்புக் கம்பளி, 'போன காரியம் பழம்தான்; இல்லாட்டித் திரும்பிடுவேனா, எத்தனை நாழியானாலும்?' என்றான். அப்படிச் சொல்லிவிட்டு எதையோ கம்பளிக்குள்ளேயிருந்து எடுத்து அந்தச் சைனுக்காரன்கிட்டே கொடுத்தான். நான் கண்ணைக் கசக்கிண்டு பார்த்தேன்..அது அந்தத் தோல் பெட்டிதான்!"


"ஹாங்....தோல் பெட்டியா? அதாவது நேற்றுக் காணாமல் போனதா?" என்று சத்தமே போட்டுவிட்டான் சீனன்.

"அது அதே தோல் பெட்டி மாதிரிதான் இருந்தது. அதுவேதான்! நேற்றுக் காணாமல் போனதேதான்! கிழவர் உயிர் போனாலும் விடாமல் வைத்திருக்கச் சொன்னாரே, அதே தோல் பெட்டிதான். நீ முதல்லே ஹார்பரிலே கற்பாறைகளுக்கு இடுக்கிலேருந்து எடுத்தியே, அதுவேதான்!"

சீனன் விக்கித்துப்போனான். வண்டி பாரிஸ்டர் வீட்டுக்கு அருகில் வந்துவிட்டது.

"சாபர்! வண்டியைக் கொஞ்சம் மெதுவாக விட்டுச் சத்தம் போடாமல், இருட்டு ஓரமாக நிறுத்து. பாக்கியையும் இவனுக்குச் சொல்லி விடுகிறேன். அப்புறம் உள்ளே போகலாம்" என்றான் ஷங்கங்.

வண்டி அவன் சொன்னது போலவே மெதுவாகப் போய்,



பாரிஸ்டர் வீட்டு வெளிச் சுவர் ஓரமாக, மரங்களின் இருட்டிலே போய் நின்றது.

ஷங்கங் மீண்டும் பேச்சைத் தொடங்கி, ''ஆச்சா? அந்தப் பெட்டியை வாங்கிக் கொண்டதும், 'நல்ல காலம்; காலையிலே கப்பல் புறப்படுகிறது. மற்றக் காரியங்களையும் ராத்திரிக்குள்ளே முடிச்சிடணும். நான் நேரே முதல்லெ அங்கே போறேன். நீ இங்கே ஆகவேண்டியதை முடிச்சிட்டு அங்கே வந்துவிடு, எல்லாம் சரியாகக் குளோஸ் ஆயிட்டா நான் சொன்னபடி பாக்கிப் பாதியைக் கையிலேயே கொடுத்திடறேன். சரிதானா?' என்றான். அதற்குக் கறுப்புக் கம்பளி, 'பாத்தியா, நான் சொன்னது மாதிரி கொடுக்கிறேன்னுகூடச் சொல்லமாட்டேங்கறியே. முதல்லெ இந்தப் பெட்டியைக் கொண்டாந்ததுக்கே நீ கொடுக்கணுமே!' என்றான். 'சரி! பாக்கியை அதேபோல முடிச்சுட்டீன்னா, அதாவது பொழுதுவிடியறத்துக்குள்ளே தீர்த்துக் கட்டிப்பிட்டீன்னா, நீ கேட்டது என்ன அதுக்கு மேலேயே தர்றேனா, இல்லையா பாரு! என்றான்.''

''எதைத் தீர்த்துக் கட்டறதுன்னு சொல்லலியா? முதல்லெ அங்கே போறேன்னானே, எங்கே போகிறானாம்!''

''அதான், பாரிஸ்டர் வீட்டுக்கு. அதாவது இங்கே!''

''ஆனால் அவன் அறை பூட்டவில்லையே! உள் பக்கம் தாழ்ப்பாள் போட்டிருக்கிறாப் போல இருக்கிறதே!''

''ஒரு சமயம் இனிமேல்தான் வருவானோ, என்னமோ? அப்புறம் கேளேன்..அப்புறம் அந்தக் கிங்-கிங் உள்ளே போய்விட்டான்.

கறுப்புக் கம்பளியின் கையிலே கத்தியையும், ஒரு பாட்டரி விளக்கையும் கொடுத்திட்டுத்தான் போனுன். உடனே கறுப்புக் கம்பளி மரத்து மேலே இருட்டிலே ஏறத் தொடங்கினுன். எனக்கா வந்த உசிரு மறுபடியும் போயிடும்போல இருந்தது. ஆனல் யார் செய்த நல்ல காலமோ, என்னை அவன் கவனிக்கவே யில்லை. கிளையோடு கிளையாக எண்ணிப்பிட்டான். மரத்துலே அவன் ஏறின வேகத்தைப் பார்த்தான்னு தெரியும்! அடேயப்பா! வாலில்லாக் குரங்கு மாதிரிதான் சரசரவென்று ஏறினுன். உன் அறை இருக்கிற பக்கமா ஒரு கிளை வளைஞ்சு வருது, பாரு. அங்கே போனுன். நான் பார்த்தேன். இது தான் சரியான சமயம்; அப்புறம் என்ருல் வம்பு என்று வேறு பக்கமா, மறைவாக மரத்திலிருந்து கிழே குதிச்சேன். அந்தக் கறுப்புக் கம்பளி கண்ணிலே படாமெ இருக்கணுமே, மெதுவாக ஒரே ஓட்டமாக ஓடி, சுவர் ஓரத்திலே இருந்த கட்டை மறைவிலே போய் மூச்சுக் கூடக் காட்டாமல் நின்றேன். உன் அறைக்குப் போவதற்கு ஏற்ற சமயம் அதுதான். ஆனல் மயிரிழையில் அகப்பட்டுக்கொள்ள இருந்தேன். மேலே ஏறியிருந்த கறுப்புக் கம்பளி மரத்திலிருந்து, சிறிது நாழிகைக் கெல்லாம் எதையோ ஒன்றைத் தூக்கிப்போட்டான். நல்லகாலம்; துளி தவறியிருந்தால் என் மண்டை பிளந்திருக்கும். அவ்வளவு கனமான பொருள். எனக்கு அது என்னவாக இருக்கும் என்றுதான் என் யோசனை ஓடியது. எதுவாக இருந்தாலும் இருக்கட்டும் என்று அதைத் தூக்கி, பக்கத்திலிருந்த குப்பைத் தொட்டிக்குள் கையில் சட்டென அகப்படாதபடி ஆழப் புதைத்துவிட்டு, உடனே ஓடியே வந்துவிட்டேன். அப்போதுதான் சாபர் தூங்கப் போகிற சமயம் - அவனைக் கண்டதும்தான் எனக்கு இந்த யோசனையே வந்தது. என் பசி, தாகம் எல்லாம் போன இடம் தெரியவில்லை. ராத்திரிக்குள்ளே இவர்கள் ரெண்டு பேரும் எதையெல்லாம் தீர்த்துக் கட்டிக் குளோஸ் செய்து விடுவார்களோ என்ற பயந்தான் முதலில் இருந்தது. எப்படியாவது உன்னையும் அழைத்துக்கொண்டுபோய் இந்தப் பாரிஸ்டரிடம் எச்சரித்து விடவேண்டும் என்று எண்ணிவிட்டேன். அதனுல்தான் இவனை உடனே போய் வண்டியையும் எடுக்கச் சொன்னேன். உன்னையும் அழைத்துக்கொண்டு இங்கே வந்தேன். இவ்வளவுதான் சங்கதி!'' என்று கூறி முடித்தான் ஷங்கங்.

சீனன் இதையெல்லாம் கேட்டு, வாயடைத்து உட்கார்ந்திருந்தான். ஆனல் அவன் மூளை தீவிரமாக வேலை செய்தது. ஷங்கங் பொறுமையிழந்து, ''சீனு! வா, எழுந்திரு! அந்தச் சைனுக்காரன் வந்தால் இனிமேல்தானே வரப்போகிறுன்! நாம்ப அதுக்குள்ளே அவரைப் பார்த்து எச்சரிக்கை செய்துவிட்டுத் திரும்பிவிடலாம். உம்.. கிளம்பு!'' என்ருன்.

''ஹோட்டல்லே கிங்கிங் ரூம் திறந்தா இருக்கிறது?'' என்று கேட்டான் சீனன்.

''இல்லை. திறக்காவிட்டாலும் உள் பக்கமாகத் தாளிடப்பட்டிருக்கிறது. வெளியில் பூட்டவில்லை!''

''அதனுல் என்ன? பின்புற வழியாக வெளியில் வரமுடியாதோ?''

''அதெப்படி முடியும்? பின்னுல் காம்பவுண்டுச் சுவர் அல்லவா? அதன் மேலே ஏறிக் குதித்தால் அடுத்த எஸ்டேட் கட்டடத்தில் கொண்டுபோய்விடும். அதையும் தவிர அதில் எப்படி ஏறிக் குதிக்க முடியும்?''

''ஏறிக் குதிக்க முடியுமா முடியாதா, அதைச் சொல் போதும். எப்படி, ஏன் என்றெல்லாம் உனக்கு ஏன் கவலை?''

''ஏறிக் குதிக்க முடியும்.''

''குதித்தால் அடுத்த எஸ்டெட் திறந்தவெளி வழியாக மௌன்ட் ரோட்டுக்கு வர முடியுமா, முடியாதா?''

''முடியும். ஆனுல் வாசலின் காவல்காரன் இருப்பானே, விடுவானு?''

''ஸ்ஸு. மறுபடியும் பாரேன். எப்படியோ வருவதானுல் வெளியிலே வர முடியும்; இல்லையா?''

"ஆமாம்; முடியும்."

"அப்படி முடியாததை யெல்லாம் சாதித்துக்கொண்டு அவன் இந்நேரம் இங்கே வந்திருந்தாலும் வந்திருக்கலாம். இல்லையா?"

"இதெல்லாம் அதிகக் கற்பனை!" என்றான் ஷங்கங், வேறு பதில் சொல்ல வழியில்லாமல்.

"கற்பனையோ கற்பனையில்லையோ, நாம் ஒரு காரியத்தைப்பற்றி யோசித்தால், நடந்தாலும் நடக்காவிட்டாலும் நாலையும் எண்ணிப் பார்த்துத்தானே ஒரு முடிவுக்கு வரவேண்டும்! அப்படி ஒருகால் அவன் வந்திருந்தால்—?"

"வந்திருந்தால்—?"

"வராமல் இருந்திருந்தாலும் வந்திருந்தால் என்று வைத்துக்கொண்டுதான் நாம் இப்போது வேலை செய்யவேண்டும். இல்லையா?"

"சரி!"

"இப்ப. அதனாலே நாம்ப ரெண்டு பேருமே உள்ளே சேர்ந்து போகணுமா, இல்லே யாராவது ஒருத்தர் போனால் போறுதா என்று பார்ப்போம். நீ மட்டும் போ; அல்லது நான் மட்டும் போகிறேன். யாராவது ஒருவன் வண்டியிலே இருப்போம். ஏதாவது விபரீதமாக இருந்தாலும் ஒருவன் வெளியிலே இருப்பது நல்லதில்லையா?"

"ஆமாம்; அப்ப நீயே போ! பாரிஸ்டர் ஒரு சமயம் என்னைக் கூட நம்ப மறுக்கலாம்."

"அதுவும் சரிதான்; முதலில் நானே போகிறேன். உள்ளே ஏதாவது விபரீதமாக இருந்தால் எப்படியோ உனக்குத் தெரிவிக்க முயல்கிறேன். நீ வண்டியில் இருப்பது தெரியாமல் இரு. தூங்கிப் போய்விடாதீர்கள்!" என்று ஷங்கங்கையும் சாபரையும் ஜாக்கிரதைப் படுத்திவிட்டு, சீனன் வண்டியை விட்டு இறங்கி, பாரிஸ்டரைப் பார்க்கப் போனான்.



சோணாசலம்: ஞாயிற்றுக் கிழமை முழுவதும் கவலைப் பட்டுக்கொண்டே நேரத்தைக் கழிக்கவேண்டியிருக்கிறது!

அருணாசலம்: அப்படி என்னடா கவலை உனக்கு?

சோணாசலம்: திங்கட்கிழமை பள்ளிக்கூடம் போகவேண்டுமே என்ற கவலைதான்!

—கலாசாமி.

---

அவன் படியேறி உள்ளே போயிருப்பானோ மாட்டானோ அதற்குள் இரண்டு முரட்டுக் கரங்கள் ஷங்கங்கின் வாயை இறுகப் பொத்தி அவனைச் சத்தம் போடவிடாமல் பிடித்துக் கொண்டன. இருட்டில் வேறு ஒன்றும் ஷங்கங்குக்குப் புலப்படவில்லை. கையையும் காலையும் பிணைத்துக்கட்டி, வண்டியிலிருந்து தன்னையும், முன்பக்கத்திலிருந்து சாபரையும் இருவர் தூக்கி, தோட்டத்திலுள்ள புதருக்கருகில் போடுவதை அவன் உணர்ந்தான். என்ன செய்வது? வாயைத் திறக்க முடிந்தால்தானே?

(தொடரும்)




## பறவைகளின் கேள்வி

பறந்து செல்லும் எம்மைநீர்
பாய்ந்து ஏன் பிடிக்கிறீர்?
சிறகை வெட்டித் தள்ளியே
சிறையிலேன் அடைக்கிறீர்? (1)

பாலும் பழமும் தருவதாய்ப்
பதவி சாகப் பேசுவீர்
வாழும் உரிமை போனபின்
வயிறு உணவு கேட்குமா? (2)

உரிமை உரிமை என்றுநீர்
உயிரை விட்டுக் கத்துவீர்
உரிமை எங்கட் கில்லையோ?
உமக்கு மட்டும் சொந்தமோ? (3)

ஆறு அறிவைப் பெற்றதாய்
அதிக மகிழ்ச்சி கொள்ளுவீர்
அறிவு பெற்ற பயன்எமை
அடிமையாக்கிக் கொல்வதோ? (4)

ஏசு காந்தி புத்தரென் (று)
எப் பொழுதும் பேசுவீர்
ஏசு சொன்ன நெறியிதோ?
இரக்க முங்கட் கில்லையே! (5)

—R. ஸரஸ்வதி

# நட்பின் வினை

## கி. சாரங்கராஜன்

"ஏண்டா ரகு, நீயும் இங்கே தான் இருக்கியா?" என்று பின்னுலிருந்து ஒரு குரல் கேட்டது; தொடர்ந்து ஒரு 'ஷொட்டு'ம் கிடைத்தது.

திரும்பிப் பார்த்தேன். என்னுடைய பள்ளித்தோழன் கணேசன் நின்றுகொண் டிருந்தான். சென்னையில் நாங்கள் இருவரும் கூடிப் படித்தவர்கள். எட்டாவது வரையில் படித்தோம். பிறகு கணேசனின் தந்தைக்கு மாற்றலாகி விடவே அவன் பம்பாய்க்குச் சென்று விட்டான். இரண்டு வருஷங்கள் கழித்து நானும் என் தந்தையுடன் டில்லியில் படிக்கச் சென்றுவிட்டேன். விடுமுறைக்காக வந்த சமயம் நடந்த சந்திப்பு இது!

இருவரும் அருகிலிருந்த "ராயல் கார்டன்'ஸுக்கு வந்து ஒரு சிமெண்டு மேடைமீது உட்கார்ந்தோம். அப்பொழுதுதான் இன்னெரு மனிதனும் அங்கே வந்து உட்கார்ந்தான். அப்பொழுது அவனை நான் சரியாகக் கவனிக்கவில்லை.

"டில்லியிலுள்ள எல்லாக் காலேஜுகளிலுமிருந்து மாணவர்கள் சேர்ந்து 'டூர்' போகிறுர்கள். ரெயில்வே 'கன்ஸெஷன்' கிடைப்பதால் பிரயாணச் செலவு மிகவும் சொற்பம்" என்றேன்.

"என்ன, நீ போகவில்லையா? என்னமோ அவர்கள் போகிறுர்கள் என்று உனக்குச் சம்பந்தமில்லாதது போல் சொல்கிருயே?" என்று கேட்டான் கணேசன்.

"இல்லையப்பா, நான் போகலே, போன வருஷமே லீவில் காஷ்மீர் போய் விட்டேன். இல்லாவிட்டால் கட்டாயம் போயிருப்பேன்" என்றேன்.

"போடு சக்கை. அங்கே இயற்கைக் காட்சிகளெல்லாம் அபாரமாக இருக்குமே. கொஞ்சம் சொல்லப்பா, எனக்கு!" என்றுன்.

எனக்கு இயற்கைக் காட்சிகளை வர்ணிப்பதில் பிரியம் அதிகம். ஆகவே கேட்பதற்கு ஒரு நண்பன் அகப்பட்டானே என்று ஆரம்பித்தேன்.

"காஷ்மீரிலுள்ள காட்சிகளைக் கண்டு களிப்பதற்குக் கண்கள் இரண்டு போதாது. தொடர்ச்சியாக இருக்கும் மலைக்குன்றுகளும், நடுவிலுள்ள ஏரிகளும் பார்த்துக் கொண்டே இருக்கலாம் என்று தோன்றும். 'டால்' ஏரியும் அதில் மிதக்கும் படகு வீடுகளுமே போதும் கண்ணைப் பறிக்க! எங்கும் ஒரே நிச்சப்தமாக இருக்கும். நிச்சப்தமென்றதும் ஜம்முவிலுள்ள ராணுவ ஆஸ்பத்திரி நினைவுக்கு வருகிறது......."

இன்னும் என்னவெல்லாமோ கூறியிருப்பேன். ஆனுல் பூஜை வேளையில் ஒரு கரடி நுழைந்து விட்டது!

"தம்பி, நீ காஷ்மீர், ஜம்மு, போயிருக்கியா? அங்கே என் மதனைப் பார்த்தாயா? எங்கே இருக்கான்?" என்று பக்கத்திலுள்ள மனிதன் கேட்டான்.

நான் அவனை உற்றுப் பார்த்தேன். அவன் மேலும் பல கேள்விகள் கேட்டான். "யாரடா இது, என்னிடம் யாரோ ஒரு மதனைப் பற்றிச் சரமாரியாகக் கேள்விகள் கேட்கிறுனே" என்று எண்ணிப் பிரமித்து நின்றேன். என்னைக் கிண்டல் செய்கிருனே என்று நினைத்தேன். நானும் சளைக்கவில்லை.

"மதனு? ஓ! பார்த்தேனே. உன்னைப்பற்றிக்கூட விசாரித்தானே!" என்றேன், என் சிரிப்பை அடக்கிக்கொண்டு.

இதைக் கேட்டதும் அவன் கண்கள் பிரகாசமடைந்தன. "அப்படியா? பேப்பரெல்லாம் சித்தப்பா அவனைப்பற்றிப் பிரசுரித்திருந்தாரே! அவன் பேப்பரைப் பார்க்கவில்லையோ என்னமோ!"

என்றான், உற்சாகம் மிகுந்து. அவன் கண்கள் கார்டனில் எதையோ தேடின.

திடீரென்று அவன் கூவினான், ''சித்தப்பா, இங்கே வாருங்கள்'' என்று யாரையோ அழைத்தான்.

இதற்குள் நண்பன் கணேசன் என் காதைக் கடித்தான். ''டேய், இது ஒரு பைத்தியம்டா. தெருவில் அவன் நடக்கும்போதெல்லாம் ஒரு ஸோல்ஜரைப் போல நடப்பான். திடீரென்று இடதுபுறம் திரும்புவான்; பிறகு மறுபடியும் 'மார்ச்' தொடங்கும்; போலீஸ் 'ஸார்ஜென்ட்' யாராவது சென்றால், சிப்பாய்கள் தோற்று விடும்படியாக ஒரு ஸல்யூட் அடிப்பான். கடந்த ஒரு மாதமாகத்தான் அவன் காணப்படுகிறான். என்றாலும் அதற்குள் மிகவும் பிரபலமாகி விட்டான்!'' என்றான் கணேசன்.

எனக்கு இப்பொழுது பயமாகப் போய் விட்டது. ''ஏதடா வம்பை விலைக்கு வாங்கிக் கொண்டோமே'' என்று எண்ணினேன். உடனே, ''ஏய்யா, உன் மதனையும் பார்க்கல்லை, ரதியையும் பார்க்கல்லை.



நான் சுமமா விளையாட்டுக்காகச் சொன்னேன். அதுக்குள்ளே கூட்டம் கூட்டறியே'' என்றேன்.

அதற்குள் ஒரு பெரியவரும் வந்து விட்டார். அவர் முகத்தைப் பார்த்தாலே ஏதோ ஒரு துன்பத்தில் தவிப்பவர்போலத் தோன்றியது.

''சித்தப்பா. இவன் மதனைப் பார்த்துப் பேசியிருக்கான். மதன் எங்கே இருக்கான் என்று இவனுக்குத் தெரியுமாம், சித்தப்பா'' என்ருன்.

அவர் அவனைப் பரிதாபமாகப் பார்த்தார். ''சரி, ராஜா. நான் அட்ரஸ் கேட்டு வாங்கிண்டு வர்றேன். நீ போயிண்டிரு. உன்னை யாரு இப்படியெல்லாம் சுத்தச் சொல்ரு?'' என்று அனுப்பினுர்.

ராஜா போனதுதான் தாமதம், நான் முந்திக்கொண்டு கூறினேன்.

''ஸார், மன்னித்து விடுங்கள். எனக்கு இந்த ஊர் புதிது. தெரியாமல் விளையாட்டாக உளறி விட்டேன்'' என்றேன்.

அவர் கண்களில் நீர் துளித்தது. ''இதெல்லாம் எனக்குச் சகஜமாகப் போய் விட்டது, தம்பி. நீயாவது மன்னிப்புக் கேட்டாயே, மற்றவர்களெல்லாம் 'இந்தப் பைத்தியத்தை ஏன் வெளியே விட்டே?' என்று என்னைக் கோபிப்பார்கள். இங்கே வந்து ஒரு மாதத்துக்குள் எத்தனையோ தடவை என்னை இவன் சங்கடத்திலாழ்த்தி விட்டான்'' என்று கூறிவிட்டு விடு விடுவென்று நடந்து சென்ருர்.

பிறகு நண்பனிடம் பேசிவிட்டு விடை பெற்றுக்கொண்டு வீடு சென்றேன்.

'மதன் என்பது யார்? அவன் இப்பொழுது எங்கே! ராஜாவுக்கு



ஏன் பைத்தியம் பிடித்தது? அவனது சிற்றப்பாவின் கவலைதோய்ந்த கண்கள் விடுத்த செய்தி யாது?' கட்டாயம் எல்லாவற்றையும் தெரிந்துகொள்ள வேண்டும் என்று ஆவல் உண்டாயிற்று.

* * *

மறு நாள் காலை சுமார் பத்து மணிக்கு உணவருந்தி விட்டு நண்பன் கணேசன் வீட்டிற்குக் கிளம்பினேன். பஸ்ஸில் சென்றால் கால் மணிதான் பிடிக்கும். எனவே பஸ்ஸில் ஏறினேன். போகும் வழியில்தான் 'ராயல் கார்டன்' இருந்தது. கார்டனில் அந்தப் பெரியவர்—ராஜாவின் சிற்றப்பா - ஒரு பேப்பர் படித்துக்கொண்டு சிமெண்டு மேடையில் உட்கார்ந்து கொண்டிருந்தார். என்னுள் உருவெடுத்த ஆவல் உணர்ச்சி என்னை உந்தித் தள்ள, கணேசன் வீட்டுக்கு இரண்டு ஸ்டாப்பிங்குகள் முன்னதாகவே, ராயல் கார்டனில் இறங்கிக்கொண்டேன்.

"சார், மீண்டுமொரு முறை வந்து உங்களைப் புண்படுத்துவதற்கு மன்னித்து விடுங்கள். நேற்றே எனக்குக் கேட்கவேண்டும் என்று ஆசை. வித்தியாசமாக நினைத்துக் கொள்ளக் கூடாது. மதன் என்பது யார்?"

அவர் ஒரு வறட்டுச் சிரிப்புச் சிரித்தார். அவர் எனக்காகவே சிரிப்பை வரவழைத்துக் கொண்டார் போலத் தோன்றியது. அவர் முகத்தில் சோக ரேகைகள் படர்ந்திருந்தன.

"தம்பி, உன்னை எனக்கு ரொம்பவும் பிடித்துப் போய்விட்டது. உன்னைப் போல் சிலர்தான் என்னை ஒரு மனிதனாக நினைக்கிறார்கள். யாரோ ஒருத்தன் ஒரு பைத்தியத்தை வைத்துக்கொண்டு மாரடிக்கிறான் என்று என்னை இன்று உலகம் கூறுகிறது. மதன் யார் என்று கேட்டாய். யாரிடமாவது என் மனத்திலுள்ளதைக் கூறினால்தான் நிம்மதியாக இருக்கும்போலத் தோன்றுகிறது. உன்னிடம் முழுவதும் சொல்லி விடுகிறேன். அப்பொழுதாவது எனது மனச் சுமை குறையும்" என்று கூறிவிட்டு, நீண்டதொரு பெருமூச்சு விட்டு விட்டு ஆரம்பித்தார்.

எங்கள் குலத்தொழிலே ராணுவ சேவை என்று கூறலாம். ராஜாவின் அப்பா சிவசாமியும் நானும் இரண்டாவது உலக மகா யுத்தத்தில் சேவை புரிந்தோம். அதில் சிவசாமி இறந்து போனான். நான் யுத்தம் முடிந்ததும் ராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றுத் திரும்பினேன்.

எனக்குப் பிள்ளை - குட்டி கிடையாது. சிவசாமியின் ஒரே பிள்ளையான ராஜாவைப் படிக்க வைத்து அன்பாக வளர்த்துக்கொண்டிருந்தேன். ராஜாவிடம் எனக்கு அளவிலாப் பாசம் உண்டு. இளம் வயதிலேயே அவனை விட்டு அவனுடைய தாய் இறந்து போனதிலிருந்தே எனக்கு அவன் மேல் ஒரு தனி அன்பு உண்டு.

1947-ஆம் வருஷத்திலே காஷ்மீர் யுத்தம் ஆரம்பித்த போது ராஜாவின் காலேஜ் படிப்பு முடியும் தறுவாயில் இருந்தது. படிப்பை விட்டு விட்டுச் சேனையில் சேரவேண்டும் என்று தீர்மானித்தான். அவனை வேண்டாம் என்று கூறி எவ்வளவோ மன்றாடினேன். அவன் அதற்கெல்லாம் செவி சாய்க்கவில்லை. அவனுடைய அப்பாவின் ரத்தம் அவனுக்குள் ஓடிக்கொண்டிருந்தது!

காஷ்மீரிலிருந்த இந்தியாவின் சைன்னியத்தில் நம் தமிழர்கள் ஏராளமாக இருந்தனராம். ராஜாவும் இன்னும் மற்றவர்களும் பட்ட கஷ்டங்களையெல்லாம் எனக்கு அவன் எழுதியிருக்கிறான். முதல் பிரிவிலேயே இவர்கள் போய்விட்டதால் அநேக இன்னல்கள் இருந்தன. பனியில் சென்று பழக்கப் பட்டவர்கள் இல்லையாதலால் எத்தனையோ பேர் காய்ச்சலோடு திரும்பினர். பனியால் சிலருக்கு உடம்பில் தடிப்புகள் ஏற்பட்டன; சிலருக்குப் பாதங்களில் சிறு சிறு விரிசல்கள் ஏற்பட்டு நடக்க முடியாமல் திண்டாடினராம். ராஜாவும் பல கஷ்டங்களைப்பட் டிருக்கிறான். கஷ்டங்கள்தானா? காஷ்மீர் சென்றிருக் காவிடில் அவனுக்கு இப்படி மூளைச்

சிதைவுதான் ஏற்பட்டிருக்குமா?'' என்று கூறி நிறுத்தினர். அவருக்குத் தொண்டை அடைத்தது.

ராஜா ஜம்முவிலிருக்கும் பொழுதுதான் மதன் என்னும் இன்னொரு சிப்பாயுடன் சிநேகமானுன். மதனும் நம் பக்கத்து ஊர்ப் பையன் தான். ஒருவருக்கொருவர் துணையாக இருந்துவந்தனர். அந்தச் சூழ்நிலையில் இம்மாதிரி அன்னியோன்னியமாகப் பழக யாரும் இல்லாவிட்டால் வாழ்க்கையே வெறுத்துப் போய்விடும். அவர்களைப் பிரிக்க முடியாததொரு நட்பு அவர்களுக்குள் ஏற்பட்டுவிட்டது.

ஜம்முவுக்கு 25 மைல்களுக்கப்பால் சண்டை தீவிரமாக நடந்து கொண்டிருந்தது. ஜம்முவிலிருந்து இந்தியத் துருப்புக்களை ஒவ்வொரு டிவிஷனுகச் சண்டை நடக்குமிடத்திற்கு அனுப்பிக்கொண்டிருந்தனர். அப்போதும் ராஜாவும் மதனும் சேர்ந்தே அனுப்பப்பட்டனர்.

சில தினங்களுக்குப் பிறகு ஒரு நாள் மதன் யுத்தத்தில் பலத்த காயமடைந்தான். காயமடைந்த மற்றும் சில சிப்பாய்களுடன் அவனும் ஜம்மு 'மிலிடரி' ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டான். 'சீரியஸ்' கேஸுகளுக்குத்தான் சிப்பாய்களை ஜம்முவுக்கு அனுப்புவார்கள்.

ராஜாவுக்கு மதன் ஜம்மு ஆஸ்பத்திரிக்குச் சென்ற செய்தி தெரிந்ததும் அவன் பதறினுன். சண்டை தீவிரமாக நடந்துகொண்டிருந்ததால் அவன் தன்னிடத்தைவிட்டு நகர முடியவில்லை.

அன்றிரவு அவனுடைய 'ட்யூடி' முடிந்ததும், தன்னுடைய 'லெப்டினன்'டிடம் சென்று விஷயத்தைக் கூறினுன்.

''சார், இன்றிரவு சென்று நாளைக் காலை திரும்பி விடுகிறேன், சார். அவன் என் 'டியரஸ்ட் பிரண்ட்' சார்.''

''என்னப்பா இது! குழந்தை மாதிரி பேசறியே. ஏதாவது நடக்கக்கூடிய காரியமா இது?'' என்ருர் லெப்டினன்ட்.

பிறகு ஒரு நாள் கழிந்தது. யுத்தத்தில் போராடிக்கொண்டிருந்த ராஜாவின் மனத்திலும் ஒரு பெரும் போராட்டம் நடந்து கொண்டிருந்தது. மதனைப் பார்க்கும் அதிருஷ்டம் தனக்கு இருக்குமா என்று ஏங்கினுன்.

அன்றிரவு அவன் கேள்விப்பட்ட விஷயம் அவன் மனத்திற்குச் சிறிது உற்சாகமளித்தது. அதற்கடுத்த நாள் ஜம்முவுக்குப் போக வேண்டிய ஒரு முக்கிய காரியம் இருப்பதாகவும் அதற்கு அனுப்ப யாரேனும் சிப்பாயைத் தேடிக்கொண்டிருந்தனர் என்றும் அறிந்தான். உடனே அவன் தன்னதிகாரியிடம் விரைந்தான். தான் அவ்வேலையை எடுத்துக் கொள்வதாகக் கூறினுன். உத்தரவும் கிடைத்தது.

அடுத்த நாள் காலை ஜீப்பில் புறப்பட்டான். ஜம்முவிலிருக்கும் ராணுவ ஆபீஸில் கூறவேண்டிய சமாசாரத்தை நன்கு மனப்பாடம் செய்து கொண்டான். யுத்த சமயத்தில் காகிதங்களை எடுத்துப்போவது மிகவும் அபாயகரமாதலால் முக்கியமான விஷயங்களை மனத்தில் வாங்கிக்கொண்டு செல்வதுதான் வழக்கம்.

மதனைப் பிரிந்த ஒவ்வொரு நிமிஷமும் அவனுக்கு யுகமாகத் தோன்றியது. அதிவேகமாக 'ஜீப்'பைவிட்டான் ராஜா. ஜீப் ஒரு குக்கிராமத்தின் வழியாகப் போய்க்கொண்டிருந்தது. சிறிது தூரத்தில் ஒரு திருப்பம் வந்தது. அங்கே நடுரஸ்தாவில் இரண்டு ஆடுகள் படுத்துக் கொண்டிருந்தன. ராஜா தன்னுல் இயன்றவரை ஜீப்பை நிறுத்தப் பார்த்தான். அப்படியும் ஓர் ஆட்டின்மீது ஏறிவிட்டது ஜீப். மற்ருேர் ஆடு தப்பியோடி விட்டது. ராஜாவுக்குக் குப்பென்று வியர்த்தது.

நிமிஷத்தில் ஒரு குடியானவன் 'ஓ'வென்று கத்திக்கொண்டு ஓடி வந்தான். அதைக் கேட்டதும் பக்கத்திலிருந்து பலபேர் வந்து கூடவாரம்பித்தனர்.

''போச்சே சாமி, என் ஆட்டைக் கொன்னுட்டியே, என் உயிரைக் கொண்டு போயிட்டியே'' என்று பதறினுன் அந்தக் குடியானவன் ஹிந்தியில்.

''அவசர வேலையிருக்கு,சாஹேப். மன்னிச்சுடு. இன்னொரு ஆடு

வாங்கிக்க. இந்தா ஐம்பது ரூபாய்'' என்றுள் ராஜா.

''காசு எம் மாத்திரம் சாமி? பெண் ஆட்டை டென்னு கொன்னுட்டே. அது கர்ப்பிணியாச்சே, சாமி. எங்கள் ஜீவனமே அது மேலேதானே இருந்தது, சாமி.''

''சரி இந்தா நூறு ரூபாய்'' என்றுன் ராஜா.

''விட்டால்போதும் என்றிருந்தது ராஜாவுக்கு. நேரே முதலில் தன் ராணுவ ஆபீஸுக்குச் சென்றுன். அங்கே கூறவேண்டிய விஷயத்தைக் கூறிவிட்டுப் பக்கத்திலுள்ள ராணுவ ஆஸ்பத்திரிக்கு நடந்தான்.

விபத்து நடந்த காட்சி அவன் மனத்தைவிட்டு அகலவில்லை.

பெண் ஆடு, கர்ப்பிணி'' என்று அவன் வாய் முணமுணத்தது.

ஆஸ்பத்திரியில் வரவேற்பு ஆபீஸரிடம் கூறினுன்: ''எனக்கு மதன் என்பவரைப் பார்க்க வேண்டும். அவர் ஒரு சிப்பாய்; மூன்று தினங்களுக்கு முன்பு இங்கே அனுமதிக்கப்பட்டவர்.''

அவர் சிப்பாய்களுக்குள் 'சி' பிரிவுக்கு ராஜாவை அனுப்பினர்.

''மதனை நீங்கள் பார்க்க முடியாது. சிறிது சீக்கிரமாக உங்களால் வரமுடியவில்லையா?'' அங்கே இருந்தவர் கூறினர்.

தாமதத்துக்குக் காரணமாக இருந்த ஆக்ஸிடென்ட் ராஜா கண்முன் வந்து நின்றது.

''தவிர்க்க முடியாத தாமதம் ஏற்பட்டுவிட்டது. ஏன் பார்க்க வருபவர்களின் நேரம் தீர்ந்து விட்டதா? பெண்ணடு———''

''அதற்கில்லை. நீங்கள் கேட்ட மதன் இன்று காலையில் தான் இறந்து போனர். அவர் போய் இரண்டு மணிநேரம்கூட ஆகியிருக்காது.''

ராஜாவின் முகம் வெளிறியது; பேயறைந்ததுபோல ஆனுன்.

''ஆ! மதன், மதன் . . .பெண் ஆடு வந்து . . . . .மதன் . . . . நீ எங்கே எங்கே . . .'' என்று கத்திக்கொண்டே கண்மண் தெரியாமல் ஆஸ்பத்திரிக்குள் ஓடினுன். அங்கிருந்த ஒரு தூணின் மேல் முட்டிக்கொண்டு மூர்ச்சித்துக் கீழே விழுந்தான். டாக்டர்களும், வேலையாட்களும் அவனிடம் விரைந்தனர். அவனை ஆஸ்பத்திரியிலேயே ஒரு படுக்கையில் கிடத்தி, சிகிச்சை செய்தனர். அவனுக்கு நினைவு வர இரண்டு நாள் ஆயிற்று.

அன்று சுயநினைவு அடைந்த ராஜா சுயநிலையை அடையவில்லை! அவனுக்குச் சித்தப்பிரமை ஏற்பட்டுவிட்டது என்று டாக்டர் முடிவு கூறினர். எப்பொழுது பார்த்தாலும் எதையோ பார்த்தவாறு உட்கார்ந்து கொண்டிருப்பான். திடீரென்று ''மதன் மதன்'' என்று கத்துவான்.

டாக்டர் 'சர்டிபிகேட்' கிடைத்தவுடன் ராணுவத்திலிருந்து அவனை நீக்கிவிட்டனர். ராஜாவை உடனே அழைத்துச் செல்லுமாறு எனக்குத் தந்தி கிடைத்தது. அவனுடைய அவல நிலையைக் காண முதல் தடவையாகவும் கடைசி முறையாகவும் காஷ்மீர் சென்றேன். அன்று அழைத்து வந்தவன்தான்.

யாராவது காஷ்மீர், ஜம்மு என்று ஏதாவது கூறினுல் உடனே அச்சொற்கள் அவன் மனத்தில் கிளர்ச்சியை உண்டுபண்ணி விடுகின்றன. இல்லாவிட்டால் எல்லோர் மாதிரியும் இருக்கிறுன்.

''இப்போது அதிர்ச்சியின் உக்கிரகம் குறைந்து வருகிறது. காலப்போக்கில் ஆறவேண்டிய காயம் அது. ஆனுல் அதன் தழும்பு மறையாது. மதன் இறந்துவிட்டான் என்று ராஜா ஒரு பொழுதும் நம்ப மாட்டான்.

* * *

இன்னெரு நாள். ஒரு தெருவில் நான் போய்க்கொண்டிருக்கும் பொழுது சிறிது முன்னுல் ராஜா இரண்டு சிப்பாய்களுக்குச் 'சல்யூட்' அடித்த காட்சி என் மனத்தைக் கலக்கியது. ஆனுல், அவர்கள் அவனை முறைத்துப் பார்த்துவிட்டுக் கொல்லெனச் சிரித்தனர்.

''பாத்தியா பைத்தியத்தை! மனத்துக்குள்ளே 'ஸோல்ஜர்'னு எண்ணம்'' என்றுன் ஒருவன்.

அவர்களுக்குத் தெரியுமா அவனுடைய சோக சரித்திரம்? தெரிந்தால் சிரிப்பார்களா?




# நினைத்ததும் நடந்ததும்

நீலா ராமமூர்த்தி

“மானேஜர் மோகனசுந்தரம் வந்திருக்கிறார்” என்று ஷண்முகம் கூறியதைக் கேட்டதுமே ஒரு மாதிரியாகிவிட்டது ராமநாராயணன் முகம்.

“அர்ஜண்டா இப்பவே பார்க்கணுமாம் உங்களை!” என்று அவன் சொன்னபோதே மனத்தில் ஏற்பட்ட பயத்தால் உடல் நடுங்க, நாக்குழற வேலை செய்யத் தோன்றாமல் தம் இருகைகளால் தலையை அமுக்கியபடி நாற்காலியில் சாய்ந்துவிட்டார்.

பரிதாபகரமான அவருடைய நிலையைக் கண்டுப் பதறிப்போன ஷண்முகம், “என்ன சார், உடம்புக்கு?” என்றான்.

“ஒன்றுமில்லையப்பா” என்ற ராமநாராயணனின் மனம் வெகு தூரம் போய்விட்டது.

சேலத்திலுள்ள ‘பாம்பே பார்மஸி’ என்ற அந்த மருந்துக் கடையில் வெகு நாளாக வேலை பார்த்து வருகிறார் ராமநாராயணன். சம்பளம் எண்பதே ரூபாய். என்றாலும் சென்னைக் கிளை ஆபீஸ் மானேஜரான மோகனசுந்தரத்தின் நம்பிக்கைக்கு மிகவும் பாத்திரமானவர். ‘ராமநாராயணன் நல்ல மனிதர். நாணயஸ்தர்’ என்ற எண்ணத்தில் மோகனசுந்தரம் நிம்மதியாக அந்த ஊர்க் கடையையே அவர் வசம் விட்டிருந்தார்.

இரண்டு மூன்று மாதத்திற்கு ஒரு முறை மட்டும் விஜயம் செய்து, மேற்பார்வையிட்டு, அவரைப் பற்றித் தமக்கு ஏற்பட்ட நல்ல அபிப்பிராயத்தை மேலதிகாரிகளுக்குத் தெரிவித்தார். அதன் விளைவாகப் பத்து ரூபாய் உயர்ந்தது அந்த மாதம்.

சம்பளம் அதிகமாயிற்றோ, இல்லையோ? அவர் குடும்பத்தில் இன்னொரு ஜீவனும் அதிகரித்துவிட்டது. ஏற்கெனவே பெரிய

சம்சாரி. இரண்டு பிள்ளைகளும், மூன்று பெண்களும் வயோதிகத் தாயாரும் பலவீனமான மனைவியும் அடிக்கடி வரும் விருந்தாளிகளும் அவரைத் திணற அடித்தனர்.

இருந்தும் காலணாகூடக் கடன் வாங்கவில்லை. வாங்கக் கூடாது என்பது அவர் கொள்கை. ஆனால் வனஜா கல்யாண வயதை அடைந்தபோது அவருடைய உறுதி நழுவத்தான் செய்தது. வேறு வழி? அதிகச் சிரமத்திற்கு இடமின்றி நல்ல வரனும் கிடைத்தது, "என் மஞ்சள் காணிச் சொத்தான சொல்ப நிலத்தையும் விற்று எடுத்துக்கோ" என்று தாயாரும் சொல்லியபோது, கடனே உடனே பட்டுக் கல்யாணத்தை முடிக்கத்தான் வேண்டி வந்தது. தம்முடைய முழு அன்பிற்கும் பாத்திரமான வனஜாவிற்குத் தம் சக்திக்கு மீறியே சீர் வகைகளைச் செய்துப் புக்ககத்திற்கும் அனுப்பினார்.

கொஞ்ச நாள் வரை புத்திரியின் பிரிவால் வாடிய அவர், 'ஆபீஸிலே ஐந்நூறு ரூபாய் கடன் வாங்கி விட்டோமே, எப்படிக் கொடுக்கப் போகிறோம்!' என்ற கவலையில் ஆழ்ந்து விட்டார். காலச் சக்கரம் வெகு வேகமாகச் சுழன்றது. ராமநாராயணனின் கஷ்டமும் துரித காலத்தில் போயிற்று.

'திடீர்' என்று அவர் வீட்டு மாடு இறந்தது. வீடு ஒரு பக்கம் சரிந்தது. குழந்தைகளில் ஒன்று காலன் வசப்பட்டது.

பலவிதக் கஷ்டங்களாலும் மனம் உடைந்து போன அவர் வனஜாவிடமிருந்து வந்த கடிதம் ஒன்றையும் பார்த்துப் பைத்தியம் பிடித்தவர் போல் ஆனார்.

"அவசரமாய் இரு நூற்றி ஐம்பது ரூபாய் வேண்டும், அப்பா. உடனே அனுப்பு, எப்படியாவது. கூடிய சீக்கிரம் திருப்பி விடுகிறேன். நீ அனுப்பத் தவறினால் என் கதி அவலமாகி விடும்" என்ற அவள் கடிதத்தைப் பார்த்து வேறு எப்படியாக முடியும் அவர் மன நிலை?

'கையில் ஒரு காசும் இல்லை. கடன் கொடுப்பார் யாருமில்லை' என்பது போல் இருந்த அவர், 'என்ன செய்வது?' என்று புரியாமல் விழித்தார். "யாரையாவது கேட்போம்" என்பதற்கும் மனம் இடம்தரவில்லை பழக்கமில்லாததால் நா எழவில்லை.

"ஐயோ, தெய்வமே! இன்னுமா சோதிக்கிறாய், என்னை!" என்று வேதனைப்பட்டார்.

ஆபீஸில் கேட்க வாயும் இல்லை. பொழுதும் இல்லை. 'அனுப்பச் சௌகரியமில்லை, வனஜா' என்று எழுதப் பார்த்தார். அதனால் அவளுக்கு என்ன கஷ்டம் வருமோ என்ற பயம் ஏற்பட்டது உடனே. வீட்டிலோ தரித்திர தேவதை தாண்டவம் ஆடினாள். குன்றிமணித் தங்கம்கூட இல்லை, யார் உடம்பிலும்.

ராமநாராயணன் என்ன செய்வார்? ஆபிசில் வேலையே ஓடவில்லை. அன்றே கடிதம் வந்த இரண்டாம் நாள். ஆதலால் அவர் மனம் தவியாய்த் தவித்தது.

"நாளை இந்நேரத்தில் என்னால் ஏற்படப் போகிற ஏமாற்றத்தை எப்படித் தாங்கப் போகிறாள் வனஜா!" என்று உள்ளம் குமுறினார்.

அப்பொழுது ஓர் அதிசயம் நடந்தது.

"பட்டணம் ஆபீசிலேயிருந்து பணம் வந்திருக்கு, சார். புது மருந்தெல்லாம் வாங்கச் சொன்னாரே; அதற்குத்தான் முன்னூறு ரூபாய் அனுப்பியிருக்கிறார், மானேஜர்" என்று தபால்காரன் ஒருவனுடன் ஓடி வந்தான் ஷண்முகம்.

கையெழுத்தைப் போட்டுப் பணத்தை வாங்கிய ராமநாராயணனின் மனத்தில் எப்படியோ அந்த எண்ணம் ஏற்பட்டது.

"நம் நிலையைப் பார்த்து மனம் இரங்கிக் கடவுளே அனுப்பி இருக்கிறார். வனஜாவிற்கு அனுப்பி விடலாம். மானேஜர் வருவதற்குள் எப்படியாவது சமாளித்து விடலாம் நிலைமையை" என்ற அசட்டுத் தைரியம் ஏற்பட்டது மனத்தில்.

"ஆபீஸ் பணமாச்சே" என்று கூசியது கை. பத்து நிமிஷம் ஊசலாடியது அவர் மனம், கடமைக்கும் பாசத்திற்கும் இடையே. முடிவில் பாசமே வென்றது. கடவுளின் மேல் பாரத்தைப் போட்டு விட்டுப் பணத்தை அனுப்பினர். "இந்த மாதக் கடைசிக்குள் அனுப்பி விடு, திரும்ப. இல்லையேல் உன் தந்தையை உயிரோடு பார்க்க முடியாது" என்று கடிதமும் எழுதி விட்டார்.

மானேஜர் வர இன்னும் பத்து நாட்கள் ஆகும். அதற்குள் பணம் வந்துவிட்டால் மருந்து வாங்கலாம் என்று நினைத்தார்.

சொன்ன கெடுவிற்குள் அனுப்பி விடுவாள் வனஜா என்ற தைரியம் இருந்தும் அனுப்பாவிட்டால் என்ற பயம் அடிக்கடி தலை காட்டியது.

அதன் விளைவு பலவிதக் கற்பனையில் ஈடுபடுத்தியது அவரை. இப்படிப் பட்ட நிலையில்தான் திடீர் விஜயம் செய்தார் கம்பெனி மானேஜர்.

"இனி நம் பாடு அதோகதிதான்" என்று பதறியதில் வியப்பென்ன இருக்கிறது? அவர் இடிந்துபோய்க் காணப்பட்டார்.

"மிஸ்டர், உடம்பை என்ன செய்கிறது?" என்ற மானேஜரின் குரலைக் கேட்டுத்தான் சுய நினைவை அடைந்தார் ராமநாராயணன்.

கண் எதிரே நின்ற மோகனசுந்தரத்தைப் பார்க்கக் கூசியது அவர் உள்ளம். அப்படியே தம் பிராணன் போய் விடாதா என்று துடித்தார்.

"அந்தக் கிரஷ்ஷை எடுடா, ஷண்முகம்" என்ற மானேஜர் அடுத்த நிமிஷமே அவர் வாயில் கொஞ்சம் ஊற்றினர். "திருடன் சார் நான்" என்று கத்தப் பார்த்தார் ராமநாராயணன்.

குளிர்ந்த பானத்தால் சற்று அடங்கியது பதற்றம். ஆச்சு; நடந்ததைச் சொல்லி மன்னிப்புக் கேட்போம் என்று தோன்றியது.

நாணத்துடன் ஒரு தரம் கண்களைச் சுழற்றினர். "விசிறியை எடுத்து விசிறப்பா ஷண்முகம். பாவம்!" என்றார் மானேஜர்.

இந்தத் துரோகிக்கா இவ்வளவு உபசாரமும் என்று கூசியவராய் எழுந்திருக்க முயன்றார் ராமநாராயணன். "வேண்டாம்; இன்னும் சற்று ரெஸ்ட் எடுத்துக்கொள்ளுங்கள். அப்புறம் பேசலாம்" என்று பரிவுடன் கூறிய மோகனசுந்தரம், "இந்த நானூறு ரூபாய்ப் பணத்தைப் பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்" என்று தம்மிடமிருந்த நோட்டுகளைத் திணித்தார் அவர் கையில். 'இது என்ன புதுமை'



என்று விழித்த ராமநாராயணன் சட்டென்று எழுந்தார்.

''உங்க மாப்பிள்ளை ராகவனோட கடுதாசி வரலையா இன்னும் உங்களுக்கு?'' என்று கேட்டார் மானேஜர் வியப்புடன்.

''இல்லையே'' என்று அவர் சொல்லும்போதே புன்சிரிப்புடன் குறுக்கிட்ட மானேஜர், ''என்னோடு காலேஜிலே படிக்கிற நாள் முதலே குறும்புத்தனம் ஜாஸ்தி அவனுக்கு. இல்லாவிட்டால் என் மூலம் பணத்தைச் சேர்த்து, திகைக்க வைத்திருப்பானா உங்களை!'' என்றார். ஆனந்தக் கண்ணீர் பெருகியது ராமநாராயணனின் கண்களில்.


''சார் போஸ்ட்'' என்ற குரல் கேட்டது. கடிதத்தை வாங்கி வந்து ராமநாராயணனின் எதிரே வைத்தான் ஷண்முகம். அவர் எடுத்துப் பார்த்தார்; வனஜா தான் எழுதியிருந்தாள்.

''என் குடும்பவிளக்கைத் தூண்டிவிட்ட அப்பாவிற்கு அநேக கோடி நமஸ்காரம். உங்கள் உதவியால் ஒரு புதிய, பெரிய வேலையாகி இருக்கிறது அவருக்கு. அந்த விசுவாசத்தால் நண்பரிடம் நானூறு ரூபாயாக அனுப்பி இருக்கும் என் கணவர் உன் சம்பளத்தையும் இரண்டு பங்கு ஆக்கும்படி கேட்டுக்கொண்டிருக்கிறார். அவரும் சம்மதித்திருக்கிறார். இதற்குப் பதில் என்ன செய்யணும் தெரியுமா? நீ பிறக்கப் போகும் உன் பேரனுக்குத் தொட்டில் வாங்கணும். இப்படிக்கு உன் அன்பான வனஜா.''

''என் மனத்தில் பொங்குகிற நன்றிப் பெருக்கை எப்படித் தங்களிடம் காட்டுவது என்று புரியாமல் தவிக்கிறேன் சார்'' என்று மோகனசுந்தரத்தைப் பார்த்துக் கூறினார் ராமநாராயணன். ஒரு தரத்திற்குப் பல தரமாக வேண்டிக்கொண்டார் தம் குல தெய்வமான குமரப் பெருமானை நோக்கி. இனியாவது என் மனம் தீய வழியில் செல்லாதிருக்க அருள் புரியட்டும் என்று.

## எண்ணிலே படங்கள்

1 முதல் 9 வரையில் 'முட்டை'



# வழ வழா, கொழ கொழா!

**எஸ். ஜி. ஆர்.**

‘‘டூ பட்டு....?’’

‘‘என்னடா கிட்டு..?’’

‘‘தூக்கமே வரமாட்டேங்குது, பட்டு..பொழுது விடியப்போறது என்பதை நெனைக்க நெனைக்க, மனம் ‘பக்கு பக்கு’ன்னு அடிச்சுக்குதே..’’

‘‘அட பயந்தாங்குள்ளி....! பொழுது விடியப்போறதுன்னு யாராவது பயப்படுவாங்களோ? விடியப் போறதேன்னு சந்தோஷப் படறதை விட்டுட்டு....’’

‘‘சந்தோஷமா....? என்ன, நீ அதுக்குள்ளே மறந்துட்டியா அதை..?’’

‘‘எதை..?’’

‘‘நேத்துக் காலையிலே அம்மா சொல்லிட்டிருந்ததை. ‘பட்டுவும் கிட்டுவும் சரியாகவே சாப்பிடற தில்லை....பேதிக்குக் கொடுத்து ரெண்டு மாசமாயிட்டுது..வயிறு உப்பசமா ஆயிட்டுது. நாளைக்குக் காலையிலே..’அப்படீன்னு அம்மா அப்பாகிட்டே சொல்லிட்டிருந்தாளே..’’

‘‘ஐயையோ..நான் மறந்தே போயிட்டேண்டா..இப்போ என்னடா கிட்டு, செய்யறது? விடிஞ்சா அம்மா விளக்கெண்ணெயும் கையுமாக வந்துடுவாளே..’’

‘‘அதுதான் ராத்திரி முழுக்க யோசனை பண்ணிட்டிருக்கேன், எப்படி ஏமாத்தறதுன்னு..ஒண்ணு பண்ணினு என்ன..? விளக்கெண்ணெய் புட்டியை எடுத்துத் தூர எறிஞ்சுட்டா....’’

‘‘அட போடா, மக்கு..முதல் காரியமா அப்பாவைக் கடைக்கு அனுப்பி வேறே வாங்கி வரச் சொல்லிடுவாள். வேறே ஏதாவது வழி இருந்தாச் சொல்லு..’’

‘‘அப்படீன்னு இப்படிச் செய்யலாம். ‘ஆ, அம்மா..வயத்து வலி தாள முடியல்லையே...அப்பா...அம்மா..ஐயையோ...’ அப்படீன்னு பெரிசா ஒப்பாரி வச்சா..’’






"ஒப்பாரி வச்சா ஆபத்து அதிகமாயிடும். 'ரெண்டு மாசமாப் பேதிக்குக் கொடுக்காததால்தான் வயித்துவலி வந்துடுத்து'ன்னு சொல்லி ரெண்டு பங்கு விளக்கெண்ணெய் குடிக்கும்படி கட்டளே பிறக்கும்.."

"அப்போ என்ன செய்யலாம்?.."

"இப்படிச் செஞ்சா என்ன..?"

"எப்படி..?"

"அப்பாவும் அம்மாவும் ஒவ்வொரு மாசமும் நமக்கு விளக்கெண்ணெய் கொடுக்கிறுளே, அவங்க என்னிக்காவது குடிச்சதுண்டோ?.."

"இல்லே..அதனுலே.."

"விளக்கெண்ணெய் என்பது படு கசப்பானதுன்னு அவங்க தெரிந்து கொள்ளச் செய்யணும். அதாவது இந்தத் தடவை விளக்கெண்ணெயை அப்பா அம்மா ரெண்டு பேரும் குடிக்கும்படிச் செய்திடணும்.."

"அது எப்படி, பட்டு, முடியும்?"

"ஏன் முடியாது..? நமக்கு அவங்க கொடுக்கிறப்போல் நாம் அவங்களுக்குக் கொடுத்துட்டாப் போறது.."





''நாம அவங்களுக்கா..? முதுகுத் தோல் உரியணுமா? 'அப்பா, அம்மா..! நீங்க ரெண்டு பேரும் விளக்கெண்ணெய் குடிக்கணும்' அப்படின்னு சொல்ல முடியமா..?''

''அட மண்டு! இதைப் போய் அவங்க கிட்டே சொல்லலாமா...? தந்திரத்தைத் தந்திரத்தால் தான் வெல்லணும்.. நமக்கு ஒவ்வொரு மாதமும் தந்திரமா விளக்கெண்ணெய் கொடுப்பதுபோல, இந்தத் தடவை நாம தந்திரம் செய்து விளக்கெண்ணெய் அவங்களுக்குக் கொடுத்துடணும்..''

''எப்படி..?''

''அப்படிக் கேளு..! விடிஞ்சதும் அம்மா எழுந்திருந்து காபி போடப் போறா. காபி போட்டானதும் அதை நாலு டம்பளரிலே கொட்டப் போறா. அதாவது ரெண்டு பேருக்கும்; மீதி ரெண்டு அப்பாவுக்கும் அம்மாவுக்கும்..''

''சரி..! மேலே சொல்லு..''

''காலையிலே நம்ம ரெண்டு லோட்டா காப்பியிலே விளக்கெண்ணெய் கலக்கப் போறா. இங்கே தான் நம்ம தந்திரம் இருக்கு. நேத்துச் சினிமாவிலே பார்த்தோமே, அது மாதிரி நாம லோட்டாக்களை மாத்திடணும்..''

''எப்படி முடியும், பட்டு. அம்மா தான் சமையலறையிலேயே இருப்பாளே..''

''அம்மாவிடம் போய், 'வேலைக்காரி கூப்பிடறா'ன்னு ஒரு கப்சா விட்டாப் போறது. அம்மா, வெளியே போகவும், நாம காபியை மாத்தவும் அம்மாவும் அப்பாவும் விளக்கெண்ணெய் கலந்த காபியைக் குடிக்கவும்...ஆ...ஹா... அந்தச் சமயத்திலே நல்ல காபியைக் குடிச்சுண்டே நாம இதை ரசிக்கலாம்..என்ன சொல்றே?''

''பட்டு..வருங்காலத்திலே நீ ஒரு பெரிய அறிவாளியா வரப் போறே...ஜமாய்ச்சுப்புடலாம், ஜமாய்ச்சு. நாம விளக்கெண்ணெய் குடிக்கறதிலேருந்து தப்பிச்சுக்கறதோடு, அதே எண்ணெயை அப்பா, அம்மாவைக் குடிக்க வைக்கும் உன் திட்டம் அபாரம்! ஒரே கல்லிலே ரெண்டு மாங்காய்..சபாஷ்..''

''டேய்..டேய்..மணி ஐந்தடிச்சுட்டுது...அம்மா எழுந்திருக்கற நேரமாச்சு. இனிமே மூச்சு விடாதே....தூங்கற மாதிரி பாசாங்கு பண்ணு..''


''பாசாங்கு பண்ண எனக்குச் சொல்லியா கொடுக்கணும்..?''

* * *

''இதோ பாருங்கோ....மணி ஆறடிச்சுட்டுது...டிகாஷன் கூட இறங்கிட்டுது. குழந்தைகளை எழுப்புங்கோ..காபியைக் கலந்ததும் மொதல்லே அவர்களுக்கு விளக்கெண்ணெயைக் கொடுத்தாகணும்?''

''இதோ...! டேய் கிட்டு..டே பட்டு....இன்னுமா தூக்கம்....? எழுந்திருங்க, எழுந்திருங்க..அடராமா..கூடத்து நடுவிலே படுக்கை போட்டிருக்கு..இந்தக் கோடியில் ஒருத்தரும் அந்தக் கோடியில் ஒருத்தருமாக உருண்டு கிடக்கிறீங்களே! உம்....எழுந்திரு, எழுந்திரு..''

''ஆ..ஆ.வ்..அதுக்குள்ளேயா பொழுது விடிஞ்சுட்டுது..?''



குட்டி நாய்: அண்ணே, உன் சாமர்த்தியம் ஒன்றும் இங்கே செல்லாது. வாலை ஒட்ட அறுத்துவிடுவார்கள். ஜாக்கிரதை.

—கணபதி.

''அம்மாடீ..அதுக்குள்ளே மணி ஆருயிட்டுதே..ஒரு வேளை கடிகாரம் நின்னுப் போயிட்டுதோ..?''

''கடிகாரம் நிக்கல்லே...நீங்க ரெண்டு பேரும்தான் தூங்கிப் போயிட்டீங்க..உம், ஜல்தி..போய் பல் தேச்சுட்டு ஓடியாங்கோ.... விளக்கெண்ணெய் குடிச்சாகணும்..உம்..''

''இதோ வந்துட்டோம்பா..''

''டீ..! பசங்க வந்துண்டிருக்கா ....சீக்கிரம் காபியிலே விளக்கெண்ணெயைக் கலந்துவை..''

''இதோ கலந்துட்டேன்!''

''அம்மா, அம்மா!''

''வாடா கிட்டு, வா பட்டு..''

''விளக்கெண்ணெயைக் காபியிலே கலந்தாச்சாம்மா..?''

''ஓ...இதோ கலந்து வச்சிருக்கேன்...வாங்கோ...''

''அம்மா, உன்னை வேலைக்காரி அவசரமாக் கூப்பிடுறும்மா...''

''இவ ஒருத்தி...நேரம் போது தெரியாமே கூப்பிட்டுண்டு...இரு, இதோ வந்துட்டேன்...''

''டேய் கிட்டு...உம்...உம்...சீக்கிரம்..லோட்டாவை மாத்திவை..''

''ஆச்சு...அப்படி...''

''ஏண்டா கிட்டு...வேலைக்காரியையே காணுமே..''

''ஒரு வேளை அதற்குள் பக்கத்து வீட்டுக்குப் போயிட்டாளோ, என்னமோ?''

''எக்கேடாவது கெட்டுப் போறு...இந்தா...ரெண்டு பேரும் கண்ணை மூடிண்டு மடமடன்னு குடிச்சுடணும்....நான் போய் அப்பாவுக்குக் காபி கொடுத்துட்டு வறேன்...''

''மடமடன்னு என்ன...? மெள்ளவே குடிக்கிறோம்...''

''டேய் கிட்டு...காபி என்னவோ போலிருக்கே...தினமும் இருக்காப் போலே இல்லையே...''

''அதுவா...? அம்மா, தனக்கும் அப்பாவுக்கும் கலந்த காபியில வியோ...அதனாலே 'ஸ்ட்ராங்'கா போட்டிருக்கா. .பாவம், இந்நேரம் அம்மாவும் அப்பாவும் விளக்கெண்ணெய் காபி குடிச்சுண்டிருப்பா...''

''கிட்டு.....டேய்....எனக்கென்னவோ குமட்டிண்டு வருதே...''

''ஐயையோ...எனக்கும் குமட்டுதே...இது என்ன சனியன்? காபிதானு, இல்லே....''

''விளக்கெண்ணெய்! பசங்களா! விளக்கெண்ணெய், எங்களையா ஏமாத்தப் பாத்தீங்க?''

''ஆ.. அதோ, அப்பாவும் அம்மாவும் இடி இடின்னு சிரிக்கிறுளே..''

''சிரிக்காமே...டேய் கிட்டு... அடிபட்டு...ராத்திரி நீங்க திட்டிய திட்டத்தை நாங்களும் கேட்டுண்டுதான் இருந்தோம். எங்களை நீங்க ஏமாத்த நெனைச்சீங்க. ஆனுல் நாங்க உங்களை முந்திண்டுட்டோம். வேண்டுமென்றே உங்க காபியிலே விளக்கெண்ணெயைக் கலக்காமல், எங்க காபியிலே கலந்துட்டோம்...பாவம், நல்ல காபியை எங்களுக்கு வெச்சிட்டு, விளக்கெண்ணெய் காபியை நீங்க குடிச்சுட்டீங்க!''

''ஆ...''

★

# பல் உடையப் போய்...

**ரமிலன்**

அன்று என்னவோ தெரியவில்லை. கிட்டுவின் அப்பாவுக்கு ஒரே கோபம்! காலையிலிருந்து விளக்கெண்ணெய் குடித்தவரைப் போல முகத்தை வைத்துக்கொண்டு எதற்கெடுத்தாலும் எரிந்து விழுந்தார். "மாதக் கடைசி. ஆபீஸில் யாரிடமோ கடன் கேட்டிருக்கிறார். கிடைக்காவிட்டால் எங்கள்மீது இப்படியா பொரிந்து விழுவது?" என்று கிட்டு மனத்திற்குள்ளாகவே கறுவிக் கொண்டான்.

திங்கட்கிழமை யாதலால் அவனுடைய அம்மா அதிகாலையிலேயே முருகனைத் தரிசிக்கப் போய் விட்டாள்! அவள் வந்துதான் காப்பி ஏதாவது ஆகவேண்டும் என்பதில்லை. அதை அப்பாவே செய்து விட்டார். முருகன் கோயில் பக்கத்தூரில் இருந்ததால் அவனுடைய அம்மா நடந்து போய்வரச் சற்று நேரம் பிடிக்கும். அம்மா வந்துதான் டிபன் செய்து கொடுப்பாள்.

அப்பா ஹாலின் ஓர் ஓரத்தில் ஈஸிசேரில் சாய்ந்தவாறு எதையோ படித்துக்கொண்டிருந்தார். கோபத்தில் இருக்கும் அவரிடம் குறும்புத்தனமாக நடந்துகொண்டால் அதற்கு வெகுமதியாக என்ன கிடைக்கும் என்பதை உணர்ந்த கிட்டுவும் அவனுடைய தங்கை ரமீலாவும் அவரை நெருங்கவே இல்லை. எங்கேயோ வெளியில் விளையாடப் போய் விட்டார்கள் போலிருக்கிறது.


அப்பா புத்தகத்தில் ஒரு பக்கத்தைக் கூடப் படித்திருக்க மாட்டார். அதற்குள்..? 'வீல்' என்ற அலறல். அதைத் தொடர்ந்து ஓர் அழுகுரல். ஆம்! சந்தேகமே இல்லை; அது ரமீலாவினுடையதுதான். குரல் வந்த திசையை நோக்கினார் அவர்.

அங்கே—

ரமீலா நின்றிருந்தாள். அவளுடைய வாயிலிருந்து ஒரே ரத்தமாக ஒழுகிற்று. "என்ன? என்ன?" என்று கேட்டுக்கொண்டே அப்பா ரமீலாவின் அருகே ஓடினார். ஏழு வயது நிரம்பிய ரமீலா அழுதுகொண்டே, "கிட்டு பல்லை உடைத்து விட்டாம்பா!" என்றாள்.

அவ்வளவுதான் தாமதம்! ஏற்கனவே சூடாகி இருந்த அவர் ரத்தம் கொதிக்கத் தொடங்கியது. ரமீலாவின் வாயைக் குளிர் நீரால் அலம்பி ஏதோ மருந்து கொடுத்து விட்டு, மாடியை நோக்கி விரைந்தார். அவர் மாடிப்படி ஏறவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. கிட்டுவே தன் மாடி அறையை விட்டுக் கீழே வந்து விட்டான்.

"என்னப்பா, ரமீலா அழுதது போல்...." அவன் முடிக்கவில்லை. 'பளீர்' என்று அவனுடைய வலது கன்னத்தில் ஓங்கி அறைந்தார்






அப்பா. ''என்னடா! ஒன்றும் தெரியாதவன்போல் பாசாங்கு செய்கிறாயா? யாரிடம் இந்தப் பகல் வேஷம் போடுகிறாய்?'' இன்னும் என்னென்னவோ உளறினார், தம் பரபரப்பில். கிட்டு கன்னத்தைப் பொத்திக்கொண்டு தன் அறைக்குச் சென்றுவிட்டான். 'அப்பா ஏன் என்னை அடிக்கவேண்டும்? நான் ரமீலாவை என்ன செய்தேன்? ஒன்றுமே புரியவில்லையே? உம். இருக்கட்டும். அப்பாவின் கோபம் தணிந்த பிறகு கேட்போம்' என்று எண்ணிவவாறே. முகத்தைத் தலையணையில் புதைத்துக்கொண்டு, வீங்கியிருந்த தன் கன்னத்தை வருடினான். அவன் கண்களிலிருந்து வழிந்த வெதுவெதுப்பான கண்ணீர் தலையணையை நனைத்தது.

* * *

ரமீலாவின் கேவல் இன்னும் நிற்கவில்லை. அடிக்கொரு தரம் விசம்பினாள். அவளைச் சமாதானம் செய்வதற்காக அப்பா அவளிடம் நிறையச் சாக்லெட் மிட்டாய்களைக் கொடுத்தார். ''அழாமல் இருந்தால் இன்னும் மிட்டாய் தருவேன்'' என்று ஆசை காட்டினார். அப்பாடா! அழுகை ஒருவாறு ஓய்ந்தது. அப்பாவுக்குச் சந்தோஷம். ரமீலாவைக் கிச்சு கிச்சு மூட்டினார். அவள் சிரித்தாள். அவரும் சிரித்தார்.

''ரமீலா, கிட்டு உன்னை என்ன செய்தான்?''

''ஒன்றும் செய்யவில்லையே!''

''பிறகு எப்படி உன் வாயில் ரத்தம் வந்தது?''

''நான் மாடிப்படி வழியே வேகமாக வரும்போது கால் தவறி விழுந்துவிட்டேன்!''

''என்ன, கால் தவறிக் கீழே விழுந்துவிட்டாயா? கிட்டு உன் பல்லை உடைத்துவிட்டான் என்று அல்லவா கூறினாய்?''

ரமீலா சிரித்துக்கொண்டே கூறினாள்:

''இல்லையப்பா, அவன் என் பல்லை உடைக்கவில்லை. நீங்கள் நேற்று வாங்கி வந்த புதுச் சீப்பின் பல்லைத்தான் கிட்டு உடைத்துவிட்டான். அதை உங்களிடம் சொல்லி, கிட்டுவுக்கு அடி வாங்கி வைக்க வேண்டும் என்று ஓடி வந்தேன். அப்பொழுது கால் தடுக்கிக் கீழே விழுந்தேன். என் பல்லில் அடிபட்டது. ரத்தம் வந்தது. வேறொன்றும் இல்லையே!''

கோபத்தில் முன்பின் யோசிக்காமல் செய்துவிட்ட தவற்றை நினைந்து வருந்தினார் அப்பா. கிட்டுவை வீணாக அடித்ததை நினைக்கும் பொழுது அவருடைய மனமே வெடித்துவிடும் போல் இருந்தது. கிட்டுவை அடித்த கை அவனை அணைத்துக் கொள்ளத் துடித்தது. கிட்டுவின் அறையை நோக்கி விரைந்தார்.

# ஸ்டிரைக்

"டேய்! மணி, குமார், கல்யாணி! எல்லாரும் இங்கே வாங்க" என்று தன் சகோதரர்களுக்கும் தங்கைக்கும் குரல் கொடுத்தான் பாலு. வீட்டுக்குள்ளேயே பொல்லாதவன் என்று பட்டம் வாங்கியவன் பாலு. அவனைக் கண்டால் மற்றச் சகோதரர்களுக்குச் சற்றுப் பயம்தான்.

எல்லாரையும் தனக்கு அருகே சுற்றி நிற்க வைத்துக்கொண்டான் அவன். "சகோதரர்களே, சகோதரிகளே!" என்று ஆரம்பித்தான்.

"டேய், என்னடா! எலெக்ஷன் பிரசங்கம் மாதிரி..விஷயத்தை நேரே சொல்வேண்டா!" என்றான் மணி.

"சரி..சொல்றேன்..நாளைப் போகு நாளன்னிக்குப் பொங்கல். ஊரிலே எல்லா வீட்டிலும் புதுத் துணிகள்..எல்லாம் வாங்கியாச்சு. 'இந்த வருஷம் தீபாவளி நமக்குக் கிடையாது. அதற்குப் பதிலாக பொங்கல் பண்டிகைதான் விமரிசையாகக் கொண்டாட வேண்டும்' என்றார் அப்போது. இப்போது என்னடான்னா அதைப் பத்தி அப்பாவுக்கு ஞாபகம்கூட இருக்கோ என்னமோ தெரியல்லே.."

"அம்மா மட்டுமென்ன? எல்லா வீட்டிலேயும் ஸ்வீட் எல்லாம் பண்ணியாச்சு.." இது கல்யாணி.

"சைலன்ஸ்" என்று ஓர் அதட்டல் போட்டுவிட்டுத் தொடர்ந்தான் பாலு.

அப்பாவுக்குப் பேபர், வெத்திலை பாக்கு, பொடி, வாங்கிக் கொடுப்பது, லாண்டிரிக்குப் போவது, அம்மாவுக்குச் சமையல் செய்யும் பொழுது, 'அதை எடு..இதை எடு' என்று கேட்பதை எல்லாம் எடுத்துக் கொடுப்பது..அடுப்பை விசிறுவது இப்படி எவ்வளவோ வேலைகள் தினசரி செய்கிறோம். நாம் வேலைகள் செய்யாவிட்டால், இவர்களால் ஒரு நாளைக்குச் சமாளிக்க முடியுமா? அதை அவர்கள் கொஞ்சம்கூட நினைக்கவில்லையே. ஒரு நாள் கிழமை வந்தால் வேண்டியதை வாங்கித் தர வேண்டாமா?"

"நான் கூடத்தான் பேட்டுப் போட்ட கதர் வேஷ்டியும் குஞ்சம் வைத்த அங்கவஸ்திரமும், கேட்டேன்" என்றான் மணி.

"நான் பட்டுப் பாவாடைதான் வேண்டுமென்று நவராத்திரியிலிருந்து கதறுகிறேன்.." என்றாள் கல்யாணி. படித்துக்கொண்டிருந்த பேபரை மடக்கி வைத்துவிட்டு, அப்பொழுதுதான் எழுந்து வந்தார் அப்பா.

"நாளன்னிக்குப் பொங்கல் அப்பா..ஞாபகம் இருக்கா?"-பாலு.

"தெரியும்டா....அதுக்கு என்ன?"

"எங்களுக்கெல்லாம் டிரஸ்..தைப்பதாகச் சொன்னியே!"

"எல்லாம் எனக்குத் தெரியும்டா.."

"என்ன தெரியும்? எங்க இஷ்டப்படி எல்லாம் வாங்கலேன்னா நாளைக்கு ஸ்டிரைக்!"

அப்பா பதிலே சொல்லவில்லை. சிரித்துக்கொண்டே மாடிப்படி ஏறி படுக்கச் சென்றார். பாலுவின் முகத்திலே ஏமாற்றம் தெரிந்தது.

''நாளைக்குப் பூராவும் ஒத்தரும் ஒரு வேலையும் செய்யக்கூடாது. ஸ்டிரைக் பண்ணனும். அம்மாவும் அப்பாவும் என்ன செய்யறான்னு பார்த்துடலாம். தலைவன் உத்தரவை நீங்கள் யாரும் மீறக் கூடாது'' என்றான் பாலு.

பொழுது விடிந்தது. 'விடிந்து எவ்வளவு நாழியாகிறது: இன்னும் என்ன தூககம்; எழுந்திருங் கோடா!'' என்ற அம்மாவின் வழக்கமான கூச்சலை லட்சியம் செய்யவில்லை அவர்கள். அவர்கள்



தான் ஸ்டிரைக் செய்கிறார்களே! என்ன பயம் அவர்களுக்கு! பல் தேய்க்கு முன்பே மணிக்கு ஒரு சந்தேகம் வந்துவிட்டது. ''டேய் பாலு, காபி குடிக்கலாமாடா?'' என்று கேட்டான். பாலு, ''பரவாயில்லை, குடிக்கலாம்டா: இல்லாவிட்டால் பசிக்குமேடா. ஆனால் வேலை மட்டும் செய்யக்கூடாது'' என்று விளக்கம் தந்தான் பாலு.

காபி குடித்துவிட்டுத் திரும்பும் போதே அம்மா, ''மணி, ஏய் மணி'' என்று கூப்பாடு போட்டாள்.

உள்ளிருந்தபடியே பல முறை கூப்பிட்டும் யாரிடமிருந்தும் எவ்விதமான பதிலும் வராமல் போகவே, கோபத்துடன் அவர்களைத் தேடிச் சென்றாள் அம்மா.

''ஏண்டா எல்லார் காதும் செவிடாப் போச்சா?'

''ஏம்மா . . . கத்தறே? . . . . நாங்க இன்னிக்கி ஸ்டிரைக் பண்ணியிருக்கோம். ஒரு வேலையும் பண்ண மாட்டோம்'' என்றான் பாலு.

அம்மா ஒரு நிமிஷம் அசந்து போனாள். இந்த வாண்டுகளின் வார்த்தை அவள் கோபத்தை மூட்டிவிட்டது. ''ஸ்டிரைக்கா பண்றேள். . ஸ்டிரைக்! பண்ணுங்கோடா . . இன்னிக்குச் சோத்து வாயிலே மண்தான் . .''

''சாப்பாடு கிடைக்கலேன்னா உண்ணாவிரதம்!''

அம்மா ஆத்திரத்துடன் திரும்பிச் சென்றாள்.

இந்தச் சமயத்தில், ''கல்யாணி, கல்யாணி'' என்று அப்பா கூப்பிடும் குரல் கேட்டது. செல்லப் பெண்ணான கல்யாணி 'ஸ்டிரைக்' என்பதை மறந்துவிட்டாள்.

''எங்கேடி பேபரைக் காணோம். . அந்தப் பயல்கள் எல்லோரும் எங்கே? ஒத்தரையுமே காணோமே! புகையிலை வாங்கிவரச் சொல்லணும் . .''

''அவாள்ளாம் இன்னிக்கி வர மாட்டா . . அப்பா. இன்னிக்கி எல்லோரும் ஸ்டிரைக் . . . . பண்றோம்.''

''என்னது, ஸ்டிரைக்கா? . .''

''எல்லாம் பொங்கலுக்காகத்தான் . . நேத்திக்குத்தான் உனக்கு எச்சரிக்கை கொடுத்தானே . . நீ சமாதானத்துக்கு வரல்லேயாம் . . அதனாலே இன்னிக்கி ஸ்டிரைக் . .'' என்று சொல்லிக்கொண்டே



வாசல் அறைக்குக் கம்பி நீட்டினுள் கல்யாணி.

''இவாளாலே நம்ம ஒத்தாசை யில்லாமே ஒண்ணுமே செய்யமுடி யாது. பார்த்துண்டே இருங்கோ, இன்னும் கொஞ்ச நேரத்திலே சமரஸத்துக்கு வந்துடுவா, அப்பா வும் அம்மாவும்'' என்ருன் பாலு.

திடீரென்று அம்மாவின் காலடிச் சத்தம் கேட்டது. ''சரி, சமரஸத் தூது வருகிறது'' என்று தீர்மானித் துக்கொண்டான் பாலு. 'டக்' கென்று கதவிடுக்கிலிருந்து தலையை உள்ளே இழுத்துக் கொண்டான்.

ஆனுல் அம்மா அந்தப் பக்கமே திரும்பாமல், வேலைக்காரி தேய்த்து வைத்த பாத்திரத்தைப் பின் பக்க மிருந்து உள்ளே எடுத்துப் போவ தைப் பார்த்ததும், ஏமாற்றமாகப் போயிற்று அவனுக்கு.

சமரஸ ஏற்பாட்டுக்கு ஒருவித மான அறிகுறியும் காணுமல் போகவே, தலைவன் பாலு நிலைமை யைத் தெரிந்துவர, கல்யாணியை உளவாளியாக அனுப்பிவைத்தான்.

சில நிமிஷங்களில் திரும்பி வந்த கல்யாணி, வழக்கம்போல் அப்பா வெற்றிலை, புகையிலை, பொடி வகையருவுடன் பேபர் படித்துக் கொண்டிருப்பதாயும்; அம்மா சமையலுக்குக் காய்கறி நறுக்கிக் கொண்டிருக்கும் விஷயத்தையும் விவரித்தாள்.

பாலுவுக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது. அப்படியிருந்தும் ஸ்டிரைக்கைத் தொடர்ந்து நடத்து வது எனச் சகோதரர் சங்கம் முடிவு செய்தது.

பள்ளிக்கூட நாட்களில் ஒன்பது மணிக்கே சாப்பிட்டுப் பழக்கமான அவர்களுக்கு வயிறு தந்தி மீட்டத் தொடங்கியது. மணி பத்து அடித் ததும் சமையல் உள்ளே அப்பா சாப்பிடும் சத்தம் கேட்டது.

''சத்தியாக்கிரகம் பண்ணினுல் என்னடா? போய் சாப்பிட்டுவிட்டு வந்து செய்வோமே'' என்ருன் மணி. கல்யாணி வயிற்றை அமுக்கி விட்டுக் கொண்டாள். குமாருக்கு ஏற்பட்ட பசிக் கோபத்தில் யாரையுமே கோபித்துக் கொள்ள முடியாமல் மூஞ்சியை 'உர்' என்று வைத்துக் கொண்டு ஜன்னல் இடுக் கால் வெளியே நோக்கிக் கொண் டிருந்தான்.

பாலு அசையவில்லை. ''கொஞ் சம் பசியை அடக்கு!'' என்ருன்.

''முடியல்லியேடா, பசி கிள்ளறதே..''

''சித்தே இருடா.. பார்ப்போம், சாப்பிடக் கூப்பிடருளான்னு..''

ஆனுல் எதிர்பார்த்ததுபோல் யாருமே கூப்பிடாமல் போகவே, பாலுவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. பசியினுல் அழுகைகூட வரும்போலிருந்தது. ஆனுல் தலைவ னை அவன் வெளியே காட்டக் கூடாதென்று தன் உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டான்.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் சமையல் உள்ளிலிருந்து முந்திரிப் பருப்பை நெய்யில் வறுக்கும் வாசனையும், ஏலக்காய் வாசனையும் கலந்துவந்து மூக்கைத் துளைத்தது. சிறிது நாழிகைக்குப் பிறகு தேங்கா யெண்ணெயின் மணம் எங்கும் வீசத் தொடங்கியது. உண்ணுவிரதி களின் மனத்தைச் சோதனை செய் தது அந்த வாசனை.

மணி பண்ணிரண்டு. தலைவ னிடம் எல்லாருக்கும் கோபம்.

தலைவன் பாலு ஒரு தீர்மானத் திற்கு வந்தான். ''பேசாமலிருங் கள். நான் ஒட்டலில் போய் ஏதா வது கொஞ்சம் ஆகாரம் வாங்கி வருகிறேன். யார் யாரிடம் சில்லறை இருக்கிறதோ எடுங் கள்'' என்ருன் பாலு. காலணுக் களும் அரையணுக்களுமாக 'நிதி'க்கு நான்கணுத் தேறியது.

பாலு ஒட்டலிலிருந்து அறைக் குள் நுழைந்தபொழுது மணி மட் டுமே அங்கே இருந்தான். மற்ற இருவரும் எங்கே என்ருன் பாலு. மணி சமையல் உள் பக்கம் சுட்டிக் காட்டினுன். பாலுவுக்கு அசாத் தியக் கோபம் வந்தது.

''கருங்காலிகள், கோடரிக் காம்புகள், தலைவனுக்கு மதிப்புக் கொடுக்கத் தெரியாத தறிதலைகள்! இவர்களால்தான் பெரிய இயக்கங் கள் எல்லாம் பாழாகின்றன!'' என் றெல்லாம் கத்தினுன்.

கொண்டுவந்த பொட்டலங்களை மணியிடம் எறிந்து, ''நீ தின் னுடா'' என்ருன் பாலு. மணியோ

தலையைப் பலமாக ஆட்டிக் கொண்டு. "நீயே தின்னுடா; எனக்கு வேண்டாம்" என்று அவனிடமே தள்ளிவிட்டு, தன் வயிறும் நிறைந்திருப்பதன் அறிகுறியாக ஓர் ஏப்பமும் விட்டான். பாலுவுக்கு விஷயம் விளங்கிவிட்டது. பொங்கி வந்த உணர்ச்சியின் வேகத்தில் 'விர்' என்று கிளம்பி வெளியே சென்றான் பாலு.

மறுபடி பாலு வீட்டிற்குள் நுழைந்தபொழுது இரவு எட்டு மணி. அங்கே மூவரும் தூங்கிக் கொண்டிருந்தனர்.

அவன் எறிந்துவிட்டுச் சென்ற பொட்டலங்கள் ஒரு மேஜைமேல் வைக்கப்பட்டிருந்தன. பக்கத்தில் புதிதாகச் செய்யப்பட்ட பலகாரங்களும், இரண்டு வாழைப் பழங்களும்கூட இருந்தன. அவனுக்குத் தன் ஸ்டிரைக் 'பிசுபிசு'த்துப் போனதை நினைக்க அழுகையாக வந்தது. அங்கிருந்த பலகாரங்கள் அனைத்தையும் காலி செய்து, அப்படியே படுத்துத் தூங்கிவிட்டான்.


பொழுது விடிந்தது.

எல்லோரும் ஸ்நானம் செய்து விட்டுக் கூடத்திற்கு வந்தனர். அப்பா சிரித்த முகத்துடன், ஒவ்வொருவராகக் கூப்பிட்டார். தயங்கிக்கொண்டே அவர் அருகே வந்த ஒவ்வொருவர் கையிலும் இரண்டு இரண்டு பொட்டலங்களைக் கொடுத்தார்.

பொட்டலங்களைப் பிரித்த ஒவ்வொருவர் முகத்திலும் சந்தோஷமும், ஆச்சரியமும் குடிகொண்டது. யார் யார் என்ன என்ன வேண்டுமென்று கேட்டிருந்தார்களோ, அந்த உடுப்புக்கள் ஒவ்வொருவருடைய பொட்டலத்திலும் இருந்தன.

பாலுவுக்கு மனத்தை என்னவோ செய்தது. "என்னை மன்னிச்சிடு அப்பா.." என்று திக்கித் திக்கித் தேம்பினான் பாலு.

பாலுவைத் தட்டிக் கொடுத்தார் அப்பா. "உலகத்திலே எல்லோருமே தான் இல்லாவிட்டா ஒண்ணுமே நடக்காதுன்னுதான் நினைக்கிறா.. கிடக்குப் போடா, போய் எல்லோரும் புதிசு போட்டுண்டு வாங்கோடா" என்றார். சந்தோஷத்துடன்.



"என்ன ஜோஸ்யரே! இந்த ஊரில் எத்தனை காக்காய் இருக்கும்னு சொல்வீரா?"
"இதென்ன பிரமாதம்; ஆயிரம் காக்காய்கள்!"



"அதெப்படி? கூட இருந்தால்—?"
"விருந்தாளியா வந்திருக்கும். குறைந்தால் விருந்தாளியாகப் போயிருக்கும்!"

# நீதி மன்றம்

பொ. கோபால்

நாடக உறுப்பினர்

நீதிபதி:– திருவள்ளுவர்.

வழக்கறிஞர்:– நக்கீரர், தமிழ்வேள்.

குற்றவாளிகள்:- (1) மகா தேவப் புலவர், (2) என். கே. சாமி.

மற்றும் குமாஸ்தா, வீரன்.

(இடம் – நீதிமன்றம். இருமருங் கிலும் வழக்கறிஞர்களும் பார்வை யாளர்களும் உட்கார்ந்திருக்கின்ற னர்.)

வீரன்: அமைதி! அமைதி! (நீதி பதி வந்து தம் ஆசனத்தில் அமரு கிறார்.)

நீதிபதி: (குமாஸ்தாவிடம்) வழக்கு என்ன?

குமாஸ்தா: தமிழ்க் கொலை!

நீதிபதி: (மன்றத்தை நோக்கி) அன்பர்களே! செந்தமிழ்த் தாய் நாட்டிலே நம் தமிழ் மொழியை இன்று பலர் பலவாறு சித்திர வதை செய்து வருவதாகக் குற்றம் சாட்டப்பட் டிருக்கின்ற னர். அவர்களை இப்பொழுது விசாரித்துத் தக்க தண்டனை விதிப்



பது எனது கடமையாக இருக்கிறது. நம் தாய்மொழி தமிழ் என்ற காரணத்தால் அதற்காகப் பரிந்து நடுநிலைமையான நீதி வழங்குவதிலிருந்து தவறி விட மாட்டேன் என்று உங்களுக்கு உறுதி கூறுகிறேன். இனி விசாரணை தொடங்கலாம். தமிழ் வீரம் நிறைந்த நக்கீரரே! முதல் குற்றவாளி யார்?

நக்கீரர்: மகாதேவப் புலவர்!

வீரன: மகாதேவப் புலவர்.... மகாதேவப் புலவர்....மகாதேவப் புலவர்!

(புலவர் வருகிறார்.)

குமாஸ்தா: சத்தியமாகச் சொல்லுகிறேன் என்று சொல்லும்.

மகாதேவப் புலவர்: சத்தியமாகச் சொல்கிறேன்.

நக்கீரர்: நீர்தாமே மகாதேவப் புலவர்?

மகா: ஆம், நான்தான் வரகவி மகாதேவப் புலவர்.

நக்கீரர்: உமது தற்காலத் தொழில் என்ன?

மகா: தமிழில் பேசும் படங்களுக்கு வேண்டிய பாட்டுக்கள் எழுதிக் கொடுப்பதுதான் எனது தறகால வேலை.

நக்கீரர்: நீர் பாட்டிலக்கணம் பயின்றதுண்டா? எதுகை, மோனை, சீர் - தளை முதலியவற்றில் கவனம் செலுத்துவதுண்டா?



மகா: இல்லை. எனது சுய அநுபவத்தைக் கொண்டுதான் பாடல்கள் எழுதுவது வழக்கம். டாக்கி முதலாளிகள் இந்துஸ்தானி மெட்டுகளில் அமைக்கும் பாட்டுகளையே விரும்புகிறார்கள். ஆதலால் அந்த மெட்டுகளிலேயே நான் பாட்டு இயற்றுவது வழக்கம். எதுகையாவது, மோனையாவது—அதெல்லாம் யார் கண்டார்?

நீதிபதி: டாக்கி என்றால்?

மகா: அதுதான் பேசும் படம்.

நக்கீரர்: நீர் எட்டடி உள்ள பாட்டை எழுதத் தொடங்கி, பாதிப் பாட்டிலேயே அதை முடித்ததுண்டா?

மகா: சொல்லவேண்டிய விஷயம் பாதிப் பாட்டிலே முடிந்துவிட்டபடியால், பாதியிலேயே முடித்துவிட்டேன். அவ்வளவுதான் அங்கே வேண்டிய பாட்டு. பாட்டு எப்படி இருந்தபோதிலும் எங்களைக் கேட்பார் கிடையாது. நாங்கள் எழுதுவது எல்லாம் பாட்டுத்தான். இதில் என்ன குற்றம்?

நீதிபதி தீர்ப்பு: மகாதேவப் புலவர், நீர் யாப்பிலக்கணத்திலும் பொருளமைப்புத் திறமையிலும் தேர்ச்சிப் பெறும்வரையில் உமது பாடல்களை ஏற்றுக்கொள்ள எந்தப் பட முதலாளியும் முன்வரக் கூடாது எனத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.—செல்லலாம். சரி; அடுத்தது?

குமாஸ்தா: சொல்லறிஞர் தமிழ்வேள்....

நீதிபதி: தமிழ்வேள் அவர்களே! இரண்டாவது குற்றவாளியை அழைத்து விசாரியுங்கள்.

தமிழ்வேள்: என். கே. சாமி.

வீரன்: என். கே. சாமி...... என். கே. சாமி.. என். கே. சாமி!

(சாமி வருதல். சத்தியம் செய்தல்.)

தமிழ்வேள்: ஐயா, சாமியாரே! உமது முழுப் பெயர் என்ன?

என். கே. சாமி: நா. கிருஷ்ண சாமி.

த. வே: கண்ணனது அழகிய திருப் பெயரை வெட்டிச் சுருக்கி வைத்துக்கொள்ள நீர் யாரிடம் அநுமதி பெற்றீர்?

சாமி: என்னுடைய 'நேமை' என் இஷ்டப்படி வைத்துக்கொள்ள எனக்கு 'ரைட்' இல்லையா, என்ன?

த. வே: இருக்கட்டும்! தெள்ளுத் தமிழமுதிலே ஆங்கிலமாகிய நஞ்சைக் கலந்து, செந்தமிழின் இனிமையைக் கொலை செய்ததாக நீர் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறீர்: அத்தகைய கொடிய கொலைக் குற்றத்தைச் செய்ய நீர் மனம் துணிந்த காரணம் என்ன?

சாமி: நானா 'டமிலை மர்டர்' பண்ணினவன்? நோ, நோ, இது சுத்த 'ஹம்பக்.' எனக்கு மதர் டங்கில், ரொம்ப டேஸ்ட் உண்டு. எங்கள் 'காலேஜ் ஸ்டூடன்ட்ஸ்'களுக்குள் டமில் பிராக்டிசை இன்க்ரீஸ் செய்ய டமிலியன் சொசைட்டி ஒண்ணு ஸ்டார்ட் பண்ணி இருக்கிறோம். அதற்கு நான்தான் செக்ரடட்டரி. ஒரு லாங்க்வேஜிலே, பாரின் லாங்க்வேஜ் வேர்ட்ஸ் வந்து கலந்தால் அதன் வால்யூ இன்க்ரீஸ் ஆகுமே தவிர, எவ்விதத்திலும் மட்டு ஆகாது. அந்தந்தக் காலத்து டீசென்சிக்குத் தக்கபடி நேஷனல் லாங்க்வேஜையும் சேஞ்ஜ் பண்ணிக்க வேண்டியதுதான் முக்கியமாகும்.

த. வே: கனம் பொருந்திய நீதிபதி அவர்களே! குற்றவாளியின் ஆங்கிலத் தமிழ் மணிப்ரவாள வாக்கு மூலத்தைத் தெரிந்து கொண்டீர்களா? இப்படியே ஒவ்வொரு வரும் பேசிக் கொண்டும், தம் பெயரைச் சுருக்கிக் கொண்டும் போனால் மொழி கெடுவதோடல்லாமல், பெயர்களும் கெட்டுவிடும். தெய்வ மணம் கமழும் தமிழ் மொழியில் பிற மொழிச் சொற்களை இவ்விதம் கலப்பது பாலில் நஞ்சைக் கலந்தது போலாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீதிபதி: கிருஷ்ணசாமி! அந்நிய நாட்டு மொழி மோகம் முழுவதும் தீர்ந்து செந்தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபடும் வரையில் உமக்கு யாரும் எவ்வித வேலையும் கொடுக்கலாகாது என்று தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. போகலாம்.

(நீதி மன்றம் கலைகிறது)


புலிக்குட்டி கட்டுகளை அவிழ்த்துக் கொண்டு அந்தக் குகைப் பொந்தின் வழியே அடுத்த அறையைப் பார்க்கிறன் . . . . . . . . .
ஆ! இளவரசி அபராஜிதா! அதோ, என் தந்தை.
வேங்கை வீரா புலிக் குட்டி!
நீ பாம்புடன் விளையாடுகிறய், பெண்ணே!
தந்தையே! நான் புலிக்குட்டி யிடம் சிக்க இருந்தேன். நல்ல சமயத்தில் அருமுதிய வீரர் என்னை வெளியேற்றி இங்கே கொண்டு வந்து விட்டார். தாமதியாமல் வந்து என்னை அழைத்துப் போகவும்.
வேண்டாம்! கொடுக்காதே.
அடுத்த அறையில் யாரோ பேசுகிறர்கள். பெண்ணே! உனக்குச் சொல்லவில்லை!


யாரடா அங்கே! அந்தப் பொந்தை உடனே அடையுங்கள்!
இளவரசி! பெரிய சூது! நான் தான் வேங்கை வீரன்!
எல்லாம் தெரியும்! எங்கள் குல எதிரி புலிக் குட்டி நீதான் என்று!
புலிக்குட்டி செய்வது அறியாது திகைத்து நிற்கும் போது குகையின் மேல் உள்ள பலகை ஒன்று திறப்பது தெரிகிறது.......
ஆ! நீங்கள் பிள்ளையார் கோயில் சாமியார் போல...
உஸ்.. பேசாதே! அங்கிருந்து இதற்கு ஒரு பாதை வருகிறது..
ஒரு வாரம் எப்படியாவது பொறு. முதலில் அபராஜித வர்மன், பிறகு சோழ அரசன், அவன் மைந்தன் எல்லாரும் இங்கே சிறைப்படப் போகிறார்கள்... அப்புறம் பாரேன்... ஒன்றும் கவலைப்படாதே! ஆண்டவன் அருள் உனக்கு உண்டாகும்!
சரி ஸ்வாமி!


ஒரு பெரிய ரகசியம் வெளியாகப் போகிறது! என் தங்கையே எனக்குச் சத்துருவாகிற தென்றால்...
சரியாக ஏழாவது நாள் குகையின் சரியான வாயில் திறக்கப் பட்டு, சிட்புலி உள்ளே நுழைந்து வருவதைப் புலிக்குட்டி பார்க்கிறான்..
குழந்தாய்! சௌக்கியமா? என்ன பேசாமல் இருக்கிறாய்! நான் கற்றுத் தந்த வித்தையை என்னிடமே காட்டுகிறாயா?
என்ன வேண்டும் உங்களுக்கு!
கோபப்படாதே மகனே! என் ஆசைக் கனவு இன்று நிறைவேறுகிற நாள்! உன் உதவியை நாடித்தான் இங்கே வந்தேன்...... நாளை உனக்கு விடுதலை...
ஓ! அப்படியா! மகிழ்ச்சி!
அன்று இரவு சாமியார் பலகை வழியாக திறந்து கொண்டு வந்து....
புலிக்குட்டி! ஆதித்த சோழனும் மதுராந்தக சோழனும் இன்று பிடிபட்டுச் சிக்கிவிட்டார்கள். நாளை உன் கையாலேயே அனைவரையும் வெட்டி வீழ்த்த வேண்டும் என்று ஏற்பாடு. தட்டாமல் ஒப்புக்கொள்... ஆனால் ஜாக்கிரதை! ஆபத்தான காரியம்!
ஹஹ் ஹஹ்ஹா!!!

(தொடரும்)

# நீங்களும் நானும்

[உங்களோடு நேரிடப் பொழுது போக்கவே இந்தப் பகுதியை ஆரம்பிக்கிறேன். பல நாட்களாக நீங்கள் கேட்டு வரும் இந்தப் பகுதியில் உங்களுக்குத் தோன்றும் சந்தேகங்களையெல்லாம் கேட்கலாம். எனக்குத் தோன்றியவைகளைச் சொல்கிறேன். பிறரைப் புண்படுத்தாத முறையிலும், கூடுமானவரையில் உங்களுக்குப் பயன்படக்கூடிய கேள்விகளாகவும் கேளுங்கள்.

—ஆசிரியர்.]

கோ. கிருஷ்ணமூர்த்தி, திருவல்லிக்கேணி.

கே: மனிதன் முதல் முதல் எப்போது தோன்றினான்? பூமி எப்போது தோன்றியது?

ப: முதல் மனிதன் தோன்றி ஆறு லட்சம் வருஷம் ஆகின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் கருதி வருகிறார்கள். ஆனால் சமீப கால ஆராய்ச்சியாளாகள் மனித குலத்தின் வயதே ஐம்பதாயிரம் ஆண்டுகள்தான் என்று கூறுகிறார்கள். அதற்கும் பலகோடி வருஷங்களுக்கு முன்பே இந்தப் பூமி தோன்றியது என்று ஆராய்ச்சி கூறுகிறது. சுமார் இருநூறு கோடி ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியது இந்தப் பூமி.

கே சுப்பிரமணியம், மயிலாப்பூர்.

கே: குரங்கிலிருந்து தோன்றியவனா மனிதன்?

ப: நம்மையெல்லாம் பார்க்கும்போது எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது! வால் இருந்து, வால் அறுந்து, மனிதன் ஆனோமா, அல்லது வால் முளைத்து, வால் வளர்ந்து குரங்காக மாறுகிறோமா என்பதுதான் எனக்குத் தெரியவில்லை! எப்படியானால் என்ன? மனிதனுக்கும் குரங்குக்கும் சில குணங்களில் ஒற்றுமை இருப்பதைப் பார்க்கும்போது கொஞ்சம் வெட்கமாகக்கூட இருக்கிறது, உண்மைதானே என்று!

சுராஜ், தஞ்சாவூர்.

கே: சினிமாப் பகுதி வேண்டாம் என்று ஒதுக்குகிறீர்களே, நீங்கள் சினிமாவுக்கே போவதில்லையா?

ப: போவதுண்டு; அதனால் தான் வேண்டாம் என்கிறேன்!

சுமதி, நாகர்கோயில்.

கே: நீங்கள் கிண்டலாகவும் ஹாஸ்யமாகவும் பதில் சொல்வீர்களா?

ப: அப்படிப் பதில் சொல்லக்கூடிய விதமாக உனக்குக் கேள்வி கேட்கத் தெரிந்தால்-?

அ. ரெஸாக், குடந்தை.

கே: சினிமா நட்சத்திரங்களைப் பற்றி நான் தொடர்ந்து கேள்வி கேட்கப் போகிறேன்! ஜாக்கிரதை!

ப: எந்த நட்சத்திரமுமே அதிக நேரம் ஜொலிப்பதில்லை! எதற்கு வீணாக இந்தக் கேள்விகள்!

எம். எஸ். மீனா, மதுரை.

கே: வானத்து நட்சத்திரங்களுக்கும், திரை நட்சத்திரங்களுக்கும் உள்ள வேற்றுமை என்ன?

ப: பொழுது விடிந்தால் மறைந்து, இரவிலே தோன்றும் விண்மீன்களை மறுநாளும் பார்க்கலாம். ஆனால் இந்த நட்சத்திரங்கள் ஒருமுறை மறைந்தால் மறைந்தது தான்.

வி. ராமசாமி, சேலம்.

கே: எனக்குக் கதை எழுத வேண்டும் என்று ஆசை. எழுதினால் முதலில் யாருக்கு அனுப்பலாம்?

ப: எழுதினால் முதலில் ஏழெட்டு நாள் அதைப் பேசாமல் வைத்திரு. பிறகு அதை உறையிலிட்டு, அதன் மேல் உன் முகவரியையே எழுது. போதிய தபால் தலை ஒட்டிப் போட்டுவிடு. மறுநாள் அது உனக்கே திரும்பிவரும். இப்போது அதை யாரோ எழுதினது போல் படித்துப் பார். உனக்கே இப்போது நன்றாக இருந்தால் எனக்கு எழுது. அப்புறம் யாருக்கு அனுப்பலாம் என்று சொல்கிறேன்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

# பரிசுக்குரிய புத்தகங்கள்

கண்ணன்

குழந்தைகளுக்கு நண்பர்கள், உறவினர்கள் தரக்கூடிய சிறந்த பரிசு கண்ணன் வெளியீடுகள். இவற்றைப் பொங்கல் சமயத்தில் பரிசுப் பாக்கெட்டுகளாகக் குறைந்த விலையில் கொடுத்து வந்தோம். இந்த வருஷம் வேண்டிய புத்தகங்களை மட்டும் வாங்கிக்கொள்ளலாம். கண்ணன் வெளியீடுகளில் சில இப்போது கைவசம் இல்லை. சிலர் முன்பு பரிசுப் பாக்கெட்டுகளாக வாங்கியிருப்பார்கள். அதற்காகவே இந்த மாறுதல்.

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 1. | **வீடர் மணி** - ஆர்வி .. | 1 | 8 |
| 2. | **சந்திரகிரிக் கோட்டை** - ஜஸ .. | 1 | 4 |
| 3. | **அசட்டுப் பிச்சு** - ஆர்வி .. | 1 | 0 |
| 4. | **அபாயச் சங்கு** - நீலம் .. | 0 | 8 |
| 5. | **விளையும் பயிர்** - கி. வா. ஜ. .. | 0 | 8 |
| 6. | **ஜக்கு** - ஆர்வி .. | 0 | 8 |
| 7. | **ஜம்பு** - ஆர்வி .. | 0 | 8 |
| 8. | **விஞ்ஞானம் பேசுகிறுர்** - பெ. நா. அ. .. | 0 | 8 |
| 9. | **மின்னல் அரக்கன்** - ஜஸ .. | 0 | 8 |
| 10. | **ஏரிக்கரை மாளிகை** - ஜஸ .. | 0 | 8 |
| 11. | **கழுகும் கிளியும்** - 'சோமசன்மா' .. | 0 | 8 |
| 12. | **தவளையும் காளையும்** - 'சோமசன்மா' .. | 0 | 8 |
| 13. | **பாரஸீக ரோஜா** - சித்திரக் கதை .. | 0 | 5 |
| 14. | **குளிகைத் தீவு** - சித்திரக் கதை .. | 0 | 4 |
| 15. | **மாஸ்டர் பாலகுமார்** - சித்திரக் கதை .. | 0 | 4 |
| 16. | **தூங்கும் அழகி** - சித்திரக் கதை .. | 0 | 4 |
| 17. | **நீச்சல் பழக்கம்** - பயிற்சி .. | 0 | 3 |
| 18. | **கோழி விதைத்த நெல்** - பாட்டுக் கதை .. | 0 | 3 |

ரூ. 5/-க்குமேல் ஒரே சமயத்தில் வாங்குபவர்களுக்கு 20% கமிஷன் உண்டு. இந்தச் சலுகை ஒரு மாதத்துக்கு மட்டும்தான். தபால் செலவு தனி. வி. பி. பி: கிடையாது (இலங்கை தவிர).

**கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை -4.**

(Regd. as Newspaper in Ceylon.) Reg. No. M. 5542




# உங்களை மறவாத உள்ளம் ஒன்று!



## பொங்கலுக்கு ஏற்ற பரிசு!

நண்பர்கள், உறவினர்களுடைய குழந்தைகளுக்கு நீங்கள் பொங்கல் சமயத்தில் தரக்கூடிய சிறந்த பரிசு இதுதான். குழந்தைகளின் குதூகலத்துக்கும் மகிழ்ச்சிக்கும் அறிவு வளர்ச்சிக்கும் உதவுகிற பரிசு கண்ணன் பத்திரிகை.

நீங்கள் யாருக்குச் சந்தாக் கட்ட விரும்புகிறீர்களோ அவர்கள் பெயரைக் கீழேயுள்ள கூபன்களில் எழுதி, தங்கள் முகவரியையும் குறிப்பிட வேண்டுகிறோம்.

**கண்ணன் வருஷ சந்தா** (மலர் உள்பட) ரு. 4.

என் பொங்கல் பரிசாகக் கண்ணனை
ஓர் ஆண்டு அனுப்புங்கள்.

(1) பெயர் ..............................
விலாசம் ..............................
..............................

(2) பெயர் ..............................
விலாசம் ..............................
..............................

**இந்தப் பரிசு அனுப்புபவர்:**

பெயர் ..............................
விலாசம் ..............................

மேற்கண்ட சந்தாவுக்காக ரு. ........ செக்/மணி ஆர்டர்/போஸ்டல் ஆர்டர் மூலமாக வருகிறது.

